பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர்ஆண்டு 2030 ஆடி 14வெள்ளிக்கிழமை [30-07-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்:211

# தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நீலன் திருச்செல்வம் கொல்லப்பட்டார்!

## கொழும்பில் அதிஉச்சப் பாதுகாப்பு பகுதியில் நேற்றுக் காலை சம்பவம்

கொழும்பு, ஜூலை 30

தமிழர் விடுதலைக் கூட்டணியின சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் நியமன எம். பியுமான நீலன் திருச்செல்வம்(வயது 55) நேற்றுக் காலை 9. 10 மணியளவில் தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதலில் உடல் சிதறி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

கொழும்பில் அதி உச்ச பாதுகாப்புப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

றோஸ்மிட் பிளேஸில் வசிக்கும் நீலன் திருச்செல்வம் வழமைபோன்று நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் கிறகறி லேனில் உள்ள தமது அலுவலகத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தார்.

அவரது காருக்குப் பின்னால் அவரது ஏழு மெய்ப் பாதுகாவலர்களும் ஜீப்பில் வந்து கொண்டிருந்தனர்.

நீலனும் அவரது சாரதியும் மட்டும் சென்று கொண்டிருந்த கார் கின்ஸி சந்தியில் போக்குவரத்து சமிக்ஞைக்காக நிறுத்தப்பட்டது.

அச்சமயம் அந்தக் காருக்கு சமீபமாக வந்து நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருந்து இறங்கி வந்த இளைஞன் ஒருவர், நீலன் திருச்செல்வத்தின் காருக்கு முன் பாய்ந்தார் என்றும் —

அப்பொழுது பாரிய சத்தத்

(10 ஆம் பக்கம் பார்க்க)



நீலன் திருச்செல்வம்

## கூட்டணி அலுவலகத்தில் சோக இசை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் யாழ். நகரில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாவட்டத் தலைமைச் செயலகத்தில் நேற்று சோக இசை ஒலி பரப்பப்பட்டது.

(இ-5-15-139-51)

## மோட்டார்சைக்கிளில் வந்த இளைஞர் காரின் கதவைத் திறக்க முயன்றார்

### அப்பொழுது குண்டு வெடித்தது

கொழும்பு, ஜூலை 30

கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வம் சென்ற வாகனம் வீதியில் போக்குவரத்து சமிக்ஞைக்காக நிறுத்தப்பட்டதும் மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருந்து இறங்கி நீலனின் காருக்கு அருகில் வந்த இளைஞன் ஒருவர் காரின் கதவைத் திறக்க முயன்றார்.

அந்த இளைஞனைச் சுடுமாறு பின்னால் பொலீஸ் ஜீப்பில் பாதுகாப்புக்கு வந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் உரத்தகுரலில் உத்தரவிட அச்சமயம் பாரிய சத்தத்துடன் குண்டு வெடித்தது.

நேற்று நடந்த குண்டுத் தாக்குதல் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் மேற்கண்டவாறு விவரித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

காரின் பின் சீட்டில் இடது பக்கத்தில் நீலன் அமர்ந்திருந்தார். தற்கொலைக் குண்டுதாரி காரின் பின்பக்கத்தில் மோதி குண்டை வெடிக்க வைத்ததும் நீலனின் உடல் சிதறியது. காரும் பலத்த சேதத்துக்குள்ளானது.

தற்கொலைக் குண்டுதாரியின் தலையும், இருகால்களும் சம்பவ இடத்தில் இருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

## ரெலோ அமைப்பு முகாம்கள் படையினரால் சுற்றிவளைப்பு

வவுனியா, ஜூலை 30

வவுனியாவின் வைரவப் புளியங்குளம் மற்றும் கூமாங்குளம் பகுதிகளில் உள்ள ரெலோ அமைப்பின் முகாம்கள் நேற்றுக் காலை 10-30 மணியளவில் படையினரால் திடீரெனச் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன.

தேடுதலுக்கான காரணம் குறித்து தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் காணாமல் போன வாகனம் ஒன்றைத் தேடியே படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அமைதிப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வன்னிப் பகுதிக்கான புதிய தரைவழிப் பாதை திறக்கப்படல் வேண்டும் என்றும்—

அங்கு ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்றும்— கோரி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மட்டக்களப்பில் நடத்திய போராட்டத்துக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளவில் அமைதிப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்று பகல் 12 மணிக்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

## தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஆனைக்கோட்டை, கூழாவடிப் பகுதிகள் நேற்று அதிகாலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது.

வீடு வீடாகச் சென்று படையினர் நடத்திய இந்தத் தேடுதல் மதியம் வரை இடம் பெற்றது. (இ-139)

## கண்டனம் தெரிவித்து கூட்டணி அறிக்கை

கொழும்பு, ஜூலை 30

நீலன் திருச்செல்வம் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்களின் கொடூரமானதும் கொடியதுமான கொலைச் செய்தி தமிழர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டம் காரணமாக கல்விச் செயற்பாடுகள் யாவும் நேற்று ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் பாதை ஒன்றைத் திறக்கவேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஆறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் யாழ். கல்விச் சமூகம் நடத்திய போராட்டம் காரணமாக கல்விச் செயற்பாடுகள் யாவும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நேரில் சென்று ஆறுதல் கூறினார்

கொழும்பு, ஜூலை 30

தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட நீலன் திருச்செல்வத்தின் வாசஸ்தலத்துக்கு நேற்று மாலை விஜயம் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரது குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

நீலன் திருச்செல்வம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அறிக்கை ஒன்றையும் ஜனாதிபதி விடுத்தார்.

அதே நேரம் — நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் நீலன் திருச்செல்வத்தின் மறைவையொட்டி

(10ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்கள், ஆசிரியர்கள் நடத்திய போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது

### நிதி ஒதுக்க மாகாண கல்வி அமைச்சு இணக்கம்

திருகோணமலை, ஜூலை 30

வடக்கு — கிழக்கு மாகாணப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் இடர்காலக் கொடுப்பனவு மற்றும் சம்பள நிலுவை கோரி நடத்தி வந்த போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டது.

வடக்கு — கிழக்கில் உள்ள சகல அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 98 ஆம் ஆண்டுக்கான — 12 மாதத்துக்குரிய— கொடுப்பனவு, அதிபர்களுக்கான் ஒன்பது மாத காலச் சம்பள நிலுவை ஆகியவற்றை வழங்கத் தேவையான 21 கோடியே 58 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் —

இந்தக் கொடுப்பனவுகளுக்கான உத்தரவு இன்று 'பக்ஸ்' மூலம் சகல வலயங்களுக்கும் அனுப்பப்படும் என்றும்—

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் 400 பேருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

நெல்லியடி, ஜூலை 30

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில், மேலும் 400 பேர்களுக்கு திங்கள் முதல் மீளக்குடியமர்வு நிவாரணம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

நான்காம் கட்டமாக வழங்கப்படவிருக்கும் இக்கொடுப்பனவு பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கை ஆரம்பித்தவர்களுக்கு வழங்கப்படுமென பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

இதேவேளை —

ஏனையோருக்கான மீளக் குடியமர்வு நிவாரணம் அடுத்த மாதம் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## விளையாட்டு விழா

துன்னாலை ஸ்ரீ மித்திரன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க பாலர் முன்பள்ளியின் 11 ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி. பகல் 1.30 மணிக்கு க. இராசையா தலைமையில் நடைபெறும்,

இலங்கை வங்கி நெல்லியடி முகாமையாளர் எஸ். இராசேந்திரா, கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே. கார்த்திகேசு ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் பருத்தித்துறை பிரதேசசபை பொது நூலக பிரதம நூலகர் எஸ். திருச்செல்வம், கரவெட்டி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. சுப்பிரமணியம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.


## திக்கம் பனம் சாராயம் விலை குறைப்பு

திக்கம் சாராய வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயத்தின் சில்லறை விலை (750 மில்லி லீற்றர்) 200 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது. இதனை உத்தரவு பெற்ற மதுபான விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

– பொது முகாமையாளர்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி,
வடமராட்சி.

(67822)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்

### திருமதி இராஜலட்சுமி வைத்திலிங்கம்

அவர்களின் மறைவை அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ மகளிர் கல்லூரி சாவகச்சேரி.

(67823)



## மரண அறிவித்தல்கள்

திருமதி

### பொன்னம்பலம் (E. M. P.) இராசம்மா

காரைநகர் கள்ளித்தெரு தங்கோடையைப் பிறப்பிடமாகவும், இல. 17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராசம்மா வியாழக்கிழமை (29-7-99) காலை 8 மணிக்கு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (E.M.P. முன்னாள் பசறை வர்த்தகர்) அருமை மனைவியும் நாகேஸ்வரி, நவரத்தினராசா (Doctor New-Zealand), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் குலசிங்கம், ரஞ்சினி, மீனாட்சிசுந்தரம் (சுந்தரம் காட்வயர், சுன்னாகம்) ஆகியோரின் ஆசை மாமியாரும் தவக்குமரன் (யாழ் பல்கலைக்கழகம்), செல்வக்குமரன், ரேணுகா, நிர்மலன், சிறிகலா, சிவபாலன், சிவமதி, சிவயாழினி, சிவாதரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
குலசிங்கம்
(மருமகன்)

இல 17, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

(67829)

### ஜோன் பிலிப்ஸ் ஸ்ரனிஸ்லோஸ்

(ஓய்வுபெற்ற விமானப்படை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் 854, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் வசித்துவந்தவருமாகிய ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் 26 – 7 – 99 திங்கட்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் பிலிப்ஸ்–லூசியா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற திரு திருமதி ஞானப்பிரகாசம் தம்பதிகளின் அன்பு மருமகனும் விக்ரோறியாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, பாஷையூர் புனித அன்ரனிஸ் வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஜோசெப் (ப்றெஸ் ஆட்ஸ்), திரேசா, மாட்டின் ஆகியோரதும் டாக்டர் அருளானந்தம் (கனடா), மேரி மாகிரட் (ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்), பியற்றிஸ் (பிரான்ஸ்), அனுலா (புனித மரியாள் வித்தியாலயம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும் எலிசபெத், மனோன்மணி, C E குணரட்ணம் (ஓய்வுபெற்ற ஆளணி உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), காலஞ்சென்ற ஆசீர்வாதம் (கணக்காளர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை), ஸ்ரான்லி (பிரான்ஸ்), ஆனந்தராஜா (யாழ்–வேலணை கல்வித் திணைக்களம்) காலஞ்சென்ற டெய்சி, அருட்தந்தை எட்மன் மைக்கல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (30-7-99) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
ஆ. ஆனந்தராஜா
(மைத்துனர்)

854, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(67827)



**A/L** வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

கணித, விஞ்ஞான
கலை
வர்த்தகப் பிரிவு
வினாத் தாள்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**புலமைப் பரிசில் 1999**

முன்னோடிப்பரீட்சை

1) சனி – 31-7-99
2) ஞாயிறு – 01-8-99
3) திங்கள் – 02-8-99

நடைபெறும்.

**BOND**

(67825)



**லிபேட்டி தியேட்டர்**

அச்சுவேலி.
இன்று
முன்னணி
நடிகர் – நடிகைகளின்
**சுயம்வரம்**
( புதிய வெளியீடு )
நேரம்; 10-30, 2–30
(67708)



**நாகம்ஸ்**
சுன்னாகம்

ரஜனி - குஷ்பு - ஜனகராஜ்
நடித்த
**பாண்டியன்**
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[67824]



**ராஜா**
யாழ்ப்பாணம்

பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10.0 2.00
[சி/8353]


# கொடிகாமம் - கச்சாய் வீதி பாவனைக்குத் திறக்கப்பட்டது

தென்மராட்சி, ஜூலை 30

கடந்த நான்கு வருடங்களாக கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆரம்பப் பிரிவு கட்டடத்தில் முகாமிட்டிருந்த படையினர் அங்கிருந்து வாபஸ் பெற்றதையடுத்து கொடிகாமம் — கச்சாய் வீதி பொதுமக்களின் பாவனைக்கு கடந்த திங்கட்கிழமை முதல் திறந்து விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா 52 ஆவது படையணிக் கட்டளைத் தளபதி நந்தா மல்லிமராட்சியுடன் கலந்துரையாடியதையடுத்து முகாமிட்டிருந்த படையினர் வாபஸ் பெறப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள அல்லாரைச் சந்தியுடன் கச்சாய்க்குச் செல்வதற்கான போக்குவரத்துகள் தடை செய்யப்பட்டதால் கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர் ஆகியோர் ஒரு வழிப் பாதையூடாக பாடசாலை செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் வேறு பாதைகள் மூலம் தங்களது தேவைகளுக்கும் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களின் பாவனைக்கு வீதி திறக்கப்பட்டதையடுத்து போக்குவரத்துத் தடை செய்யப்பட்ட பகுதியில் திருத்தப்படாமல் உள்ள ஒரு கிலோமீற்றர் தூரம் வரையான வீதியைத் திருத்துவதற்கும் இந்த வீதி ஊடாக பஸ்சேவை ஆரம்பிக்கவும் பிரதேச சபைத் தலைவர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளைபடையினரால் பாவிக்கப்பட்டு வந்த கச்சாய் அ.த.க. பாடசாலை ஆரம்பப் பிரிவுக் கட்டடம் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# 3,973 அ. அட்டைகள் கொழும்பிலிருந்து வந்தன

நவாலி, ஜூலை 30

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாளஅட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 3 ஆயிரத்து 973 பேரின் தேசிய அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து யாழ். ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றில் 2 ஆயிரத்து 463 அடையாள அட்டைகள் பாடசாலை மூலம் விண்ணப்பம் செய்த மாணவ மாணவிகளினதும் ஆயிரத்து 510 அடையாள அட்டைகள் முதற்தடவையாக விண்ணப்பம் செய்தவர்களினதும் ஆகும்.

பாடசாலை மாணவர்களின் அடையாள அட்டைகளை அதிபரோ அல்லது அவரின் கடிதத்துடன் வேறு பிரதிநிதியோ வந்து பெற்றுச் செல்லுமாறு ஆள் பதிவுத் திணைக்கள அதிகாரி கேட்டுள்ளார்.

ஏனையவர்களின் அடையாள அட்டைகள் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-100)

# கொழும்புக்குக் கப்பலில் வெங்காயம், புகையிலை

யாழ்ப்பாணம், ஜூலை 30

குமண கப்பலில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு தொகுதி வெங்காயம் புகையிலை என்பன கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் இந்தக் கப்பலிலிருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் முடிவடைந்ததும் யாழ்ப்பாண விவசாயப் பொருள்களான வெங்காயம், புகையிலை என்பன இந்தக் கப்பலில் ஏற்றும் வேலைகள் ஆரம்பமாகும் என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்துக்குத் தேவையான 2 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் அரிசி உட்பட தனியார் நிறுவனங்களுக்கான 13 கார்கள், 3 வான்கள், 17 உழவு இயந்திரங்கள், 5 லான்ட்மாஸ்ரர்கள் என்பனவும் 'சதோச' நிறுவனத்துக்கான 227 மெற்றிக் தொன் பொருள்களும் இந்தக் கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளை —

குமண கப்பலில் எடுத்து வரப்பட்டிருந்த 2 ஆயிரத்து 900 மெற்றிக் தொன் அரிசியயும் களஞ்சியப்படுத்தும் வேலைகள் புனரமைப்புச் செய்யப்பட்ட நாவற்குழி உணவுக்களஞ்சியத்தில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

(இ-9)


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**நிறுவுனர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் - 1999**

காலம்:- 1–8–99 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9–30 மணி
இடம் :- எதிர் வீரசிங்கம் திறந்த வெளி அரங்கு

பிரதம விருந்தினர் ;-
திருமிகு பொன்னையா மகினன்
B. Sc. (Hons), M. Sc.,
தலைவர், கணித புள்ளி விபரவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்

பரிசு வழங்குபவர் :- திருமதி வனிதா மகினன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்

யாழ். மத்திய கல்லூரி. (சி/8358)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்டகாலம் ஆட்சியில் நீடிக்கக்கூடிய கூட்டணி அரசே இந்தியாவில் உருவாகும்

## தேர்தல் ஆணையாளர் நம்பிக்கை

புதுடில்லி, ஜுலை 30

செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்கள் மூலம் இந்தியாவில் நீண்ட கால ஆட்சியைத் தரக்கூடிய கூட்டணி அரசு ஒன்றே பதவிக்கு வரக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாகத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் எம். எஸ். ஹில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் வலதுசாரி அல்லது இடதுசாரிக்கொள்கையொன்றைப் பின்பற்றும் கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வருவதையும் அது ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதையும் வெகுவிரைவில் காணக்கூடியதாக இருக்கும் என ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியில் ஹில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தேர்தல் களை கட்டுகிறதா என்ற கேள்விக்கு இந்தியா மிகச்சாதாரண ஜனநாயக நடைமுறைகளூடாகத் தற்போதுசென்று கொண்டிருக்கிறது எனத்தெரிவித்த ஹில் மக்களுடைய கருத்தை மீள அறிய வேண்டிய தேவை இருந்தால் மக்களிடம் மீளச் செல்ல வேண்டியது ஜனநாயகத்தின் ஓர் அம்சமாகும். இந்தியா அதையே தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார்,

ஆறு தேசிய கட்சிகளிலும் 39 பிராந்தியக் கட்சிகளிலும் இருந்து 605 மில்லியன் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதனால் உலகிலேயே அதிகளவு மனிதர்கள் பங்குபற்றும் சம்பவம் என எதிர் வரும் பொதுந்தேர்தலை வர்ணித்துள்ள ஹில், தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சென்ற தேர்தலை விட இம்முறை அதிகளவான மக்கள் வாக்களிக்க முன்வருவர் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களாக ஊடுருவல்காரருடன் மோதல் நடைபெற்ற காஷ்மீர் பகுதியில் தேர்தல் நடைபெறும் வேளை பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுவதை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் உறுதிசெய்யும் என குறிப்பிட்ட ஹில் காஷ்மீரின் ஆறு தொகுதிகளிலும் மூன்று நாள்களுக்கு தேர்தல் நடைபெறும் எனத் தெரிவித்தார். (ஐ-ரி)

## தலைவர்கள் ஈரானில் கைது

தெஹ்ரான், ஜுலை 30

ஈரானில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு எதிர்க்கட்சித் தலைவர்களையும் பல மாணவர்களையும் ஈரானிய பொலீஸார் கைது செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர் களை வன்முறை செயற்பாடு நடத்த தூண்டுகோலாக இருந்தமை. —

வெளிநாட்டுத் தொடர்பு ஊடகங்களுக்கு தவறான செய்திகளை வழங்கியமை —

ஈரானிய ஆன்மீகத் தலைவருக்கு எதிராக அவதூறான கோஷங்களை எழுப்பியமை போன்ற குற்றச் சாட்டுக்களின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-க)

# தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தாக்கரேக்கு 6 ஆண்டுகள் தடை

புதுடில்லி ஜுலை 30

சிவசேனைக் கட்சியின் தலைவர் பால் தாக்கரே ஆறு ஆண்டுகள் தேர்தல்களில் போட்டியிடவோ வாக்களிக்கவோ முடியாது என இந்திய ஜனாதிபதி கே. ஆர், நாராயணன் தடைவிதித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பால்தாக்கரே இன வாதத்தையும் வெறுப்பையும் தூண்டி விட்டார் என்று மும்பை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உச்ச நீதி மன்றம் உறுதிப்படுத்தியதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதி மன்றின் தீர்ப்பின் அடிப்படையில் தேர்தல் திணைக்களம் செய்த பரிந்துரையை அடுத்து ஜனாதிபதி இந்த தடையுத்தரவை அறிவித்தார்.

இந்த உத்தரவை அடுத்து பால்தாக்கரேயின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு விட்டதாக மஹாராஷ்டிர மாநில தேர்தல் ஆணையாளர் மும்பையில் தெரிவித்தார்.

இந்த உத்தரவுப்படி 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி முதல் ஆறு ஆண்டுகள் தாக்கரே தேர்தலில் போட்டியிட முடியாது. இதனால் இரண்டாயிரத்து முதலாம் ஆண்டு வரை அவர் வாக்களிக்கவோ தேர்தலில் போட்டியிடவோ முடியாது.

பால்தாக்கரே எந்தத் தேர்தல்களிலும் போட்டியிடுவதில்லை என்பதால் இந்த உத்தரவு அவரைப் பாதிக்காது என்றும் —

ஆனால் அவரது வாக்குரிமையை பறித்தது நியாயமற்றது என்றும் —

சிவசேனைத் தலைவர்களில் ஒருவரான அபாஷ் தேஷாய் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையகத்தின் முடிவு சரியானது அல்ல என்று பாரதீய ஜனதாக் கட்சி பேச்சாளர் வெங்கையா நாயுடுவும் தாக்ரேக்கு எதிரான தடை வகுப்பு வாத சக்திகளுக்கு எதிரான வெற்றி என்று காங்கிரஸ் தலைவர்களும் கூறியுள்ளனர்.

### மொரோக்கோ மன்னரின் இறுதிச் சடங்கில்

# இஸ்ரேல் பிரதமருடன் குவைத் இளவரசர் கைலாகு

### எதிர்பாராத விதமாக நடந்தது

மொரோக்கோ மன்னர் இரண்டாம் ஹசனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வந்த குவைத்தின் முடிக்குரிய இளவரசர் அப்துல்லாஹ் அல் - ஸபா இஸ்ரேல் பிரதமர் இக்குட் பராக் யார் என்பதை அறியாமல் அவருடன் கைகுலுக்கிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது.

உலகத் தலைவர்களுடன் குவைத் இளவரசர் கைகுலுக்கிக்கொண்டிருந்த வேளையில் தற்செயலாக இச் சம்பவம் நடைபெற்றது. இந்தக் கைக்குலுக்கல் ஒரு சில விநாடிகளே நீடித்ததாக குவைத் தகவல்துறை அமைச்சர் ஸாத் பின்-திப்லா அறிவித்தார்.

அங்கு கூட்டம் அதிகமாக இருந்த வேளையில் இது நடைபெற்றது. அத்துடன் இவ் விவகாரத்தைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை. இஸ்ரேல் தொடர்பான குவைத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் திப்லா தெரிவித்தார். [ஐ-ரி]

# குட்டிக் கிரகத்தால் பூமிக்கு ஆபத்து?

லண்டன், ஜுலை 30

செவ்வாய் வியாழன் கிரகங்களுக்கு இடையில் இருந்து கொண்டு சூரியனைச் சுற்றிவரும் சிறிய கிரகங்களின் மோதலால் பூமிக்கு பாரிய அழிவு ஏற்படும். அதாவது உலகின் இறுதி நாள் அன்றைய தினமாகத்தான் இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்த போதும் அதற்கான சாத்தியம் மிக அரிதாக இருப்பதாகவே தற்போது தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் இந்தக் குட்டிக் கிரகங்களின் சற்றுப் பெரிய தொரு கிரகம் அடுத்த நூற்றாண்டில் பூமியுடன் மோதும் என்று விஞ்ஞானிகள் செவ்வாய்க்கிழமை எதிர்வு கூறியுள்ளனர்.

500 தொடக்கம் ஆயிரம் வரையிலான சிறிய கிரகங்கள் மற்றும் பூமிக்கு சமீபமாக உள்ள பொருள்களால் மனிதர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கோணல் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் டேவிட் ரொபினோவிற்ச் என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

பூமிக்கு சமீபமாக உள்ள அபாயகரமான பொருள்களின் எண்ணிக்கை ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரம் வரையில் இருப்பதாக முன்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இப்போது அதன் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை —

தற்போது 15 சதவீதம் தொடக்கம் 20 சத வீதமான குட்டிக் கிரகங்களே அபாயகரமானவை என அடையாளம் காணப்பட்டுள்ளன. அதே சமயம் அடுத்த தசாப்தத்திற்குள் பூமிக்கு கிட்டவுள்ள 90 சதவீதமான பெரிய பொருள்களைக் கண்டுபிடிக்கும் பணியில் விஞ்ஞானிகள் உள்ளடங்கிய 6 குழுக்கள் ஈடுபட்டுள்ளன. (ஐ-ரி)

### இந்தியா - பாகிஸ்தான் உறவு:

# கிளின்ரனின் தனிப்பட்ட முயற்சி மத்தியஸ்தமாக அர்த்தப்படாது

### அமெரிக்க வெளியுறவு அமைச்சு தெரிவிப்பு

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்போது சீர் குலைந்திருக்கும் உறவுகளை மேம்படுத்துவதற்காக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தனிப்பட்ட முறையில் செயற்படுவதை இருநாடுகளுக்கும் இடையிலான மத்தியஸ்த முயற்சியாகக் கருதக்கூடாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் தீர்க்கப்படாமலிருக்கும் காஷ்மீர் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் பேச்சுக்கள் மூலமே இரு நாடுகளும் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது என்று அமெரிக்க வெளி விவகாரத்துறை துணை அமைச்சர் கார்ல் இன்டர்பேர்த் தெரிவித்தார்.

அண்மையில் கார்கில் பகுதியில் இடம்பெற்ற ஊடுருவலுக்கு பாகிஸ்தானே காரணம் என்று குற்றஞ்சாட்டி வரும் இந்தியா இவ்வாறான துரோகச் செயல்களில் ஈடுபடுவதில்லை என்று உறுதியளித்தால் மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த முடியும் என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இரு நாடுகளுக்கும் இடையில் உறவுகளை சுமுகமாக்கி தெற்காசியப் பிராந்தியத்தில் பதற்றத்தைத் தணிக்க பில்கிளின்ரன் தனிப்பட்ட ரீதியில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். [ஐ-6]

# இந்தியக் கடற்படைக்கு அணுசக்தி நீர் மூழ்கி!

அணுசக்தி கொண்ட நீர் மூழ்கிக் கப்பலொன்றை சொந்தமாக வடிவமைப்பதில் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சித் துறையினர் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

நீண்டகாலமாக தாமதமாகிவந்த இந்தத் திட்டம் அண்மையில் காஷ்மீர் மோதல்கள் தீவிரமடைந்ததை அடுத்து துரிதப்படுத்தப்பட்டு வருவதாக 'ரைம்ஸ் ஒப் இந்தியா' செய்தி வெளியிட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யக் கூடியதாக இந்தத்திட்டம் துரிதப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

உத்தேச நீர்மூழ்கிக் கப்பல் அணு ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடிய நவீன வசதிகள் யாவும் கொண்டதாக அமையும்.

இது தவிர இந்திய கடற்படைக்குத் தேவையான நவீன இலத்திரனியல் தொலைத் தொடர்புச் சாதனங்கள், கண்காணிப்புக் கருவிகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விரைவாக பதில் தாக்குதல் நடத்தக்கூடிய சகல வசதிகளையும் பெற்றுக் கொள்ள இந்திய கடற்படை [illegible] செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-ரி)

### பாகிஸ்தானுடன்

# மூன்றாவது யுத்தத்துக்கு இந்தியா தயாராகிறது

புதுடில்லி ஜுலை 30

பாகிஸ்தானுடன் யுத்தம் ஏற்படும் பட்சத்தில்அதனை எதிர் கொள்வதற்கு வேண்டிய தயார் நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டு வருவதாக இந்திய உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கார்கில் பகுதியில் இடம் பெற்ற மோதல்களைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் அதிகரித்து வரும் பதற்றம் மூன்றாவது யுத்தம் ஒன்றை ஏற்படுத்தக் கூடும் என்று இந்தியா கருதுகின்றது.

இதனால் யுத்தம் ஏற்பட்டால் அதனை எதிர் கொள்ளும் விதத்தில் இந்தியா தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றது.

அணு ஆயுதத் தாக்குதல் நடத்தப்பட்டால் அதனை எதிர் கொள்வதற்கான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகளிலும் அதற்குப் பதிலடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான தயார்ப்படுத்தல்களிலும் ஈடுபட்டு வருவதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது- [ஐ-6]

# சிறுவருக்கு எய்ட்ஸ்

றுவாண்டாவில் எய்ட்ஸ் நோயினால் ஒரு லட்சத்து 30 ஆயிரம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனறுவாண்டாவின் எய்ட்ஸ் நோய் தடுப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களே இந்த எண்ணிக்கைக்குள் அடங்குவர்.

இதில் 37ஆயிரம் சிறுவர்கள் தாய் தந்தையரற்ற அநாதைகள் எனவும் — அதிலும் 30 சதவீதமானோர் பிறப்பிலேயே அதாவது தாய் மூலம் இந்த நோயினைப் பெற்றுக் கொண்டவர்கள் என்றும் — மேலும் தெரிவிக்கப்படுகிறது (இ—ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இல. 08, செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட கனகலிங்கம் ஜனகன் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (783122592V), (0902006014) நல்லூரில் தவறி விட்டன. இவர் இம்முறை A/L சோதனை எடுப்பதால் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(67800)

சிவானந்தன் சிந்துஜா என்பவரின்விசேடஅடையாள அட்டையும் (0902011881), பாடசாலை அடையாள அட்டையும், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். தயவுசெய்து 46/1, பிறவுண் வீதி, 4 ஆம் ஒழுங்கையில் இருக்கும் சிவா மில்லில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(67814)

### இலகு திருமண சேவை

1970, ஆயிலியம் செவ்வாயற்ற Electronic Engineer U. K. இறுதி ஆண்டு மணமகனுக்கு A/L இற்கு மேற்பட்ட சிவந்த இந்து கௌரவ குடும்ப மணமகள் தேவை. Sponser உண்டு. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா K. K. S வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

(67805)

### புறோயிலர் குஞ்சுகள்

இன்று (30-7-99) வெள்ளிக்கிழமை புறோயிலர்க் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். பிறிமா Hi - line சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடிச்சந்தி, யாழ்ப்பாணம். (67808)

புறோயிலர் குஞ்சுகள் இன்று 30-07-99 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குவிநியோகிக்கப்படும். தொடர்பு இல. 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

(67791)

### திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்திலும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(67811)

### கண்டீர்களா?

1½ வயது நிரம்பிய மாவெள்ளை நிறமுடைய பசு M.V குறியுடன் 27.7.99 முதல் காணாமல் போய் விட்டது. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறிவிக்கவும் M. விஜயகாந்தன், இல. 93, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கச்சேரி.

(67807)


## பொருளியல்

புதிய அலகுகள் ஆரம்பமாகி விட்டன.

சனி - ஞாயிறு

**A/L 2000**

8—9 உற்பத்திச் செலவுக் கோட்பாடு

10—12 தேசிய வருமான சமநிலை

**A/L 2001**

9—10 காரணி விலை நிர்ணயம்

12—1 சந்தைப் பொருளாதாரம்


R. இராஜேஸ்வரன்

**DMI**

ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(சி/8351)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| பாபாவின் மடியில் | பாபாவின் திருவடியில் |
|---|---|
| 19 | 21 |
| — | — |
| 10 | 07 |
| — | — |
| 1976 | 1997 |

அமரர் **பத்மநாதன் முரளிகுமார்**

(பழைய மாணவன் கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி: 30 - 07 - 1999

ஆண்டு இரண்டு ஓடி மறைந்ததையா உம் —
உடல் பிரிந்து
மீண்டு வருமாறு புலம்புகின்றோம் யாமிங்கு
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா, உறவினர்கள்.

3, அம்பலவாணர் வீதி,
உடுவில்.

[சி/8350]

# பண்டத்தரிப்பு கிராமச் சங்கங்கள்

# இணைந்து ஒன்றியம் அமைப்பு

சண்டிலிப்பாய், ஜூலை 30

பண்டத்தரிப்பு கோவில் பற்றுப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களின் முக்கிய தேவைகள், அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் ஆகியவற்றை ஒரே குரலில் அதிகாரிகளிடம் தெரிவித்து நிவாரணம் பெறுவதற்காக இந்தப் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒன்றிணைந்து 'பண்டத்தரிப்பு பரிஷ் கிராம அபிவிருத்திச்சங்கங்களின் ஒன்றியம்' என்ற பெயரில் அமைப்பு ஒன்றை நிறுவியுள்ளன.

இந்த ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதன் தலைவராக பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.வ.துரையப்பா தெரிவுசெய்யப்பட்டார்செயலாளராகசில்லாலை தெற்கு கி. அ. சங்கச் செயலாளர் கி. ஏ. பங்கிறாஸும் பொருளாளராக மாதகல் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் சு. வைரவநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்

இந்தப்பிரதேசத்தில் நீண்டகாலமாக திருத்தப்படாதிருக்கும் வீதிகள், ஒழுங்கைகள் திருத்தப்பட வேண்டும்—

பொது இடங்களிலும் ஆள்கள் இல்லாத வீடுகள், காணிகளிலுமுள்ள மரங்கள் கண்டபடி தறிக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும்—

பண்டத்தரிப்பு சந்தியில் உள்ள மூடப்பட்ட நிலையில் இருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்தை பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளித்து அதனை இயங்கச் செய்யவேண்டும்—

ஆகிய தீர்மானங்கள் உட்பட மற்றும் பல தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (ஐ-135)

### பெருங்குளம். மட்டுவில்

## வீதி திருத்தப் பறிக்கப்பட்ட கற்கள் அகற்றப்படுகின்றன

சுன்னாகம், ஜூலை 30

வீதி திருத்தத்துக்கெனப் பறிக்கப்பட்ட கற்கள், வீதி திருத்தம் செய்யப்படாமலே ஏற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பெருங்குளம் – மட்டுவில் வீதி திருத்தத்துக்கென 2 ஆண்டுகளுக்கு முன்னர் பறிக்கப்பட்டு, வீதியோரமாகக் கிடந்த சல்லிக் கற்களே இவ்வாறு அகற்றப்படுகின்றன.

இவ் வீதியில் சில இடங்களில் பொதுமக்கள் தலையிட்டு இவ்வாறு கல் ஏற்றப்படுவதைத் தடுக்க முயன்ற போதிலும், ஏனைய இடங்களில் இந்நடவடிக்கை தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

91 ஆம் ஆண்டின் பின்னர் இவ் வீதிதிருத்தப்படவில்லை. எனவும்—

குண்டுங்குளியுமாகக் காட்சியளிக்கும் இவ்வீதியை குழிகளைமட்டும் நிரவித் திருத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த இப் பகுதி மக்கள், வீதியை முழு அளவில் திருத்தம் செய்ய வேண்டுமெனக் கோரி உள்ளனர். (ஐ-27)

## சஞ்சிகை வெளியீடு

கொழும்புத்துறை, ஜூலை30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் அருள்மிகு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''ஞானச்சுடர்'' மாதாந்த சஞ்சிகை வெளியீட்டு விழா நடைபெறும்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

வெளியீட்டுரையை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இளைப்பாறிய அதிபர் திருமதி மங்கையற்கரசி சிற்றம்பலம் வழங்குவார்.

பிற்பகல் 12.30 மணிக்கு மகேஸ்வரபூசை நடைபெறும். (ஐ-30-173)

## சலவைத் தொட்டிகள் அமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் கைதடி மேற்கு சலவைத் தொழிலாளர்களின் தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் நீர்த்தொட்டிகள் மற்றும் கூரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கைதடி மேற்கு கிராம சேவை உத்தியோகத்தர் சு. செல்வராஜாவின் மேற்பார்வையில் கைதடி சலவைத் தொழிலாளர் சங்கத்தினால் இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

[ஐ—5]

## பாராட்டுகின்றோம்

எமது பாடசாலை மாணவி

செல்வி **பிரியங்கரி சத்தியசீலன்**

என்பவர் தமிழ்த்தின விழாக் கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை தட்டிக் கொண்டமையையிட்டு அவரை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

தமிழ் மன்றம்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

(சி/8330)


சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## மஹோற்சவ விழா அழைப்பு

அன்புடையீர்!

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம்: | 02-8-99 | திங்கள் | முற்பகல் 10-30 மணிக்கு |
| வேட்டைத்திருவிழா: | 08-8-99 | ஞாயிறு | பிற்பகல் 2 மணிக்கு |
| தேர்த்திருவிழா: | 10-8-99 | செவ்வாய் | முற்பகல் 10-30 மணிக்கு |
| பூங்காவனம்: | 12-8-99 | வியாழன் | பிற்பகல் 2-30 மணிக்கு |
| சுமங்கலி பூஜை: | 13-8-99 | வெள்ளி | பிற்பகல் 2-30 மணிக்கு (புதிய நேரப்படி) |

குறிப்பு: உற்சவத்தில் விரதம் அனுஷ்டிப்போர் கொடி ஏற்றத்திற்கு முன்பே பெயர்களைப் பதிவுசெய்து சங்கல்பம் செய்துகொள்க. சுமங்கலி பூஜை திருமணமானவர்களும் திருமணம் ஆகாத மாதரசிகளும் பங்குகொள்ளலாம். முன்கூட்டியே தாமதியாது பெயர்களைப் பதிவு செய்துகொள்க.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

தொலைபேசி இலக்கம்: உ. நாடு: 070-2125 12 வெ. நாடு: 0094-702125 12

தர்மகர்த்தா

[67813]



A/L 2000
A/L 2001

## LOGIC

**'எருப்பு'**
(முக்கியமான ஆரம்பப் பகுதி)

ஆரம்பம்: 31-07-99 மாலை 5 மணி (புதிய)

★ அடுத்த மாத நடுப்பகுதியில் A/L 2000 மாணவர்களுக்கு பகுதி II ஆரம்பமாகும்.

★ வாராந்தம் 4 மணித்தியால வகுப்புகள்.

**எஸ். எஸ். மனோகரன்**

11, குருசோ வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(ஆசனக் கோயிலுக்கு அருகில்) (67780)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு சேதமடைந்தோருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா

## மீளளிக்கத் தேவையில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 30 குடாநாட்டில் வன்செயல் காரணமாக முழுமையாக வீடு சேதமடைந்த 400 பேருக்கு மீளளிக்கத் தேவையற்ற உதவித் தொகையாக தலா ஒரு லட்சம் ரூபா வழங்க வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபை வழங்கவிருக்கின்றது.

வீடுசேதமடைந்தவர்களுக்கு உதவி வழங்குவதற்காக மேற்படி அதிகாரசபை அமுல் செய்த திட்டத்தின் கீழ் விண்ணப்பித்த ஆயிரக் கணக்கானவர்களில் முதல் கட்டமாக 400 பேருக்கே கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் எஞ்சியோருக்கு கட்டம் கட்டமாக உதவி வழங்கப்படும்.

வீட்டின் சேதமதிப்பீடுஎவ்வளவாக இருந்தாலும் அவர்களுக்கு ஆகக் கூடுதலாக ஒரு லட்சமே வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## 11 கடன் திட்டங்கள் மக்கள் வங்கியால் அமுல்

மக்கள் வங்கியினால் யாழ். மாவட்டத்தில் பதினொரு கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சுயதொழில் முயற்சிக்கடன், சுயதொழில் ஊக்குவிப்புக் கடன், ஆசிரியர் நல விசேட வைப்புக் கடன் திட்டம், வெளி நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களுக்கான கடன், சுகாதார ஊழியர் கடன், ஓய்வூதியர்களுக்கான கடன், அரச சேவையிலுள்ளோருக்கான கடன், கிராம சேவையாளர், உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கான கடன், மீளக் குடியமர்வுக் கடன், நுகர்ச்சிக்கடன், விவசாய, வர்த்தக, சிறுகைத்தொழிற் கடன் போன்ற திட்டங்களே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழில் நுட்ப ரீதியான தராதரம் பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழிலை ஆரம்பிப்பதற்கு ஒரு லட்சம் ரூபா வரையும் வெளிநாடுகளில் வேலை பெற்றுச் செல்பவர்களுக்கு அவர்களது நோக்கங்களுக்கேற்ப 50 ஆயிரம் ரூபா வரையும் —

மீளக் குடியேறுபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வரையும்—

கிராம சேவையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்கான கடனுதவியும் மக்கள் வங்கியால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கடன்கள் யாவும் வங்கி நடைமுறையின் பிரகாரம் தகுதியான விண்ணப்பதாரருக்கு உரிய பிணைகளைப் பெற்ற பின்னரே வழங்கப்படும் என்று மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ—5)

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை 30 வலி.கிழக்குபிரதேச பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை நீர்வேலி பிரதேச சபையின் பணிமனையில் பிற்பகல் 2 மணிக்கு பாலர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் தலைவி தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு சகல பாலர் பாடசாலை ஆசிரியர்களையும் சமுகம் தருமாறு யாழ். பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமைச் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

[ஐ-30]

## ஒய்வூதிய சமூகப்பாதுகாப்பு உறுதிப் பத்திரம்

வலி.கிழக்கு, ஜூலை 30 கோப்பாய் பிரதேச செயலகப் பகுதியில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கான ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு உறுதிப் பத்திரங்கள் கடந்த வாரம் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரனால் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 19 பேர்களுக்கே பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

## கோப்பாய் பிரதேசத்தில்

# 34 இளம் விதவைகளுக்கு சுய தொழில் கடன் உதவி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறும் 34 இளம் விதவைகளுக்கு சுய தொழில் திட்டத்தின் கீழ் தலா 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறும் 34 இளம் விதவைகளை சுய தொழிலில் ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் கே. கேதீஸ்வரனால் வழங்கப்பட்டது.

(ஐ-180)

# நியூசிலாந்துக்குள் நுழைய முயன்ற 80 இலங்கையர் கைது

கொழும்பு, ஜூலை 30 சட்ட விரோதமாகக்கப்பல் மூலம் நியூசிலாந்துக்குள் நுழைய முயன்ற 80 இலங்கையர்களை நியூசிலாந்துக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தத் தகவலை அண்மையில் இலங்கைக்கு வந்த அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மெகினொன் இலங்கை வெளிநாட்டு அமைச்சுக்கு தெரிவித்தார்.

அண்மையில் நியூசிலாந்துக்குள் வரும் இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், எனவே தமது நாடு நோக்கி வரும் இலங்கையர்களுக்கு தடை விதிக்குமாறு அவர் இலங்கை வெளிவிவகார அமைச்சைக் கேட்டுள்ளார் எனவும் —

நியூசிலாந்தில் தற்போது வசிக்கும் சுமார் பத்தாயிரம் இலங்கையர்களில் 90 சதவீதத்தினர் தமிழர்கள் என்றும் — அவர் குறிப்பிட்டுள்ளார்.

(இ-7-8)

## சடலம் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 30 கொழும்புத்துறையில் கரை ஒதுங்கியதாக அழுகிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட ஆணின் சடலத்தை இனங்கண்டு உதவுமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பொலீஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த செவ்வாய் மாலை ஒப்படைக்கப்பட்ட இச் சடலம் ஊதிப்பருத்த நிலையில், சில பகுதிகளில் (கால்) தசைகள் உருக்குலைந்திருப்பதுடன் நீலநிற பெனியனும், கட்டைக் காற்சட்டையும் மாத்திரம் அணிந்த நிலையில் உள்ளது.

[(ஐ15]

# பெரும்போகத்துக்கு உரம் பற்றாக்குறை

யாழ். மாவட்டத்திற்கான பசளை இரசாயன உரக் கையிருப்பு பெரும்போக நெற்செய்கைக்கும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கும் பற்றாக் குறையாக இருப்பதாக கமநல சேவைத் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு 500 மெற்றிக் தொன் யூரியா, 100 மெற்றிக்தொன் எம். ஏ. பி., 50 மெற்றிக்தொன் ரி, எஸ்.பி., 100 மெற்றிக்தொன் தென்னை உரம் ஆகியவற்றை மாஹோ கப்பலில் எடுத்து வரும் பொருட்டு உரக் கூட்டுத்தாபனத்திடம் கடன் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உரக்கொள்வனவுக்கு உரத்தின் பெறுமதியில் ஒரு பகுதி செலுத்தினால் மட்டுமே உரக் கூட்டுத்தாபனத்திடம் கடன் அடிப்படையில் உரத்தினைப் பெறமுடியும் என்றும்—

எனவே இரண்டுமாத கடனடிப்படையில் இதற்கான நிதியினைவழங்குமாறு யாழ். அரச அதிபரிடம் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் கோரியுள்ளனர்.

(ஐ-5)


## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன

சிமெந்து வெற்றுப்பைகள்

## ஏல விற்பனை

எமது வேம்பன் ஒழுங்கை உரும்பிராயிலுள்ள கொங்கிறீற் பகுதியில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள சிமெந்து வெற்றுப்பைகள் 1-8-99 ஞாயிற்றுக் கிழமை காலை 10-30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. உரப்பை ஒட்டப்பட்ட டயமன் சிமெந்துப் பைகள் — 3,000
2. டயமன் சிமெந்துப் பேப்பர் பைகள் — 800 (6 அடுக்கு)
3. L & T சிமெந்துப் பேப்பர் பைகள் — 1,400 (5 அடுக்கு)

நிபந்தனைகள்:

ஏலத்தில் பொருள்களைப் பெற்றுக் கொண்டவர்கள் பெறுமதியின் அரைப்பங்கை முற்பணமாக உடன் செலுத்தி மிகுதியை 3 வேலை நாள்களுக்குள் செலுத்தி பொருள்களை எடுத்துச்செல்ல வேண்டும்.

பொறியியலாளர்
கொங்கிறீற் பகுதி,
உரும்பிராய்.

(சி/8349)



இந்தியாவின பராஸ பார்மசூடடிகல்ஸ் அறிமுகப்படுத்தும்

புதிய ஊட்டமளிப்பு சக்தி வின்டர் ஷீல்ட்

சருமத்தை உலர்விலிருந்து பராமரிப்பதோடு சருமத்தில் ஏற்படும் சுருக்கங்கள், தழும்புகள் என்பவற்றை நீக்க விசேடமாக தயார் செய்யப்பட்டது. இந்த விசேட தயாரிப்பு கரடுமுரடான உள்ளங்கைகளை மிருதுவாக்குவதோடு உதடு வெடிப்பிலிருந்தும் நிவாரணம் தருகிறது.




இறக்குமதி செய்து சந்தைப்படுத்துவோர்
பாம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பிரைவேட) லிமிடெட
தொலை பேசி 436447, 939147

...வின்டர் ஷீல்ட் சருமத்தை நறுமணமாக்குவதுடன் மேனியை பொலிவடையச் செய்கிறது.

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்
ஜெகன் மருந்தகம் 462/B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்
மற்றும் யாழ்ப்பாணமெங்குமுள்ள மருந்தகங்கள் பல் பொருள் வணிக நிலையங்கள், அழகு சாதன கடைகள், சில்லறை கடைகள்

[சி/8058]





# ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம் ஆடிவேல் விழா



30-7-99 முதல் 31-7, 1-8-99 ஆகிய மூன்று தினங்கள் பக்தி பூர்வமாக கொண்டாடப்படும்.

30-07-99 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இந்த ஊர்வலம் தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக பகல் 11.00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 1.00 மணிக்கு ஆரம்பமாகி யாழ்நகர் அனைத்து வீதியூடாக மாலை 5.30 மணிக்கு வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலைச் சென்றடையும்.


மங்கள வாத்தியம் P. S. பிச்சையப்பா குழுவினர்

தேவஸ்தானம்

விளம்பர அன்பளிப்பு: லிங்கன் ... 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (67706)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருஷாப்திய நினைவு தினத்தில் நெஞ்சில் நீங்காத நினைவலைகள்



| வையக வாழ்வில் | வைகுந்தன் வாசலில் |
|---|---|
| 18 — 12 — 1930 | 09 — 08 — 1998 |

அமரர்

### சதாசிவக்குருக்கள் நாராயணசர்மா
(சித்தானந்த ஐயா)

நல்லவர் போற்ற நானிலம் தன்னில்
நாராயணன் எனும் நாமங்கொண்டு
நல் வாழ்வு வாழ்ந்து – எம்மையும்
நல் வாழ்வு வாழ வைத்த நற்குணத்தோய்
நலமிலா இவ்வுலகை விட
நறு மணங் கமழ் நாராயணன்
நன் மலர் பாதம் நாடி
வைகுந்தம் ஏகிய
வளம் பொருந்திய வள்ளலே !
நிலவுலகை நீத்த உங்கள் நினைவால்
வாடி நிற்கின்றோம்.
மாதங்கள் பல மாறினும்
மாற்றங்கள் பல நிகழ்ந்தாலும்
எம் உயிர் உள்ளவரை உங்கள் நினைவில்
மாற்றம் எதுவும் இல்லை !

மனைவி, மக்கள், மருமக்கள்.

புலோலி தெற்கு,
புலோலி.

[67798]

## திருமணப்பதிவு

நெடுந்தீவு, ஜூலை 30

அல்லைப்பிட்டியில் திருமணப் பதிவு செய்யாத ஏழு தம்பதியர்களுக்கு தீவக லயன்ஸ் கழகம் இலவச திருமணப் பதிவுகளைச் செய்து வைத்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் இடம் பெற்ற இலவச மருத்துவ சிகிச்சை முகாமின்போதே இவர்களுக்கு இலவச திருமணப்பதிவுகளை தீவக திருமணப்பதிவாளர் க. இளங்கோவன் செய்து வைத்தார்.

அன்றைய தினம் இடம் பெற்ற இலவச மருத்துவ முகாமில் 230 பொதுமக்களும் நூறு பாடசாலை மாணவர்களும் சிகிச்சை பெற்றனர். அல்லைப்பிட்டி கிராம அலுவலர் சி. இரத்தினேஸ்வரனின் உதவியுடன் நடைபெற்ற இந் நிகழ்வுகளில் வைத்திய அதிகாரிகள் நா. லோகநாயகம், வை. தியாகராசா, முன்னாள் பிராந்தியத் தலைவர் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.


### பாலர் ஆசிரியராக பயிற்சி

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம்
அல்லது மேல்
தபாலில் ஆறு மாதங்களில்
பயிலலாம்.

பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில்.

(67591)



A GUARANTEED PRODUCT

KOBE
ANTENNA
BOOSTER
NO:1
SELLER IN SRI LANKA

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

LANKA NIPPON
18, KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726, 437735 FAX: 437736

(சி/8289)


## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வித் திணைக்களம் - வடமராட்சி வலயம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்விகள், வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச்சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| இல. | பாடசாலை பெயரும் வேலை விபரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/நாகர் கோவில் ம. வி விஞ்ஞானகூடம் 40' × 20' அமைத்தல் | 500/- | 12,000/- |

01. மேற்படி வேலைகளுக்கு 'இக்ராட்' (ஐசிரிஏடி) நிறுவனத்தின் தரம் எம் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்கள்.

02. கேள்விப் பத்திரங்களில், பொருள்கள் சேவை வரி (ஜீ எஸ் ரி) சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை, பொருள்கள் சேவை வரி (ஜீ.எஸ் ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

03 வேலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட கேள்வி பணத்தை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 30-07-99 ஆம் திகதியிலிருந்து 11-08-99 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலைக் கட்டட வேலைகள் கிளையிற் பாடசாலைக் கட்டட பரிசோதகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

04 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடப்பட்டுக் கடித உறைகளின் இடது புற மேற்பக்கத்தில வேலையின் விபரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்டு இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில்போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு "தலைவர் கள்விச்சபை, வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம், புலோலி" என விலாசம் இடப்பட்டு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப்பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 18-08-99 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்கும் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியில் இருந்து 04 மாத காலத்திற்குள் வேலைகளைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித தாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆணைகளை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விபரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பரிசோதகரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறியத் தருகின்றோம்.

சி. சிவராஜா,
வலயக் கல்விப் பணிப்பாளர்.

பாடசாலைக் கட்டட வேலைகள் கிளை,
வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம்,
புலோலி.
1999 — 07 — 26

[சி/8312]

## யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்
### பழைய மாணவர் சங்கம்
### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

எமது சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு 28-07-99 புதன் பிற்பகல் 3-00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

சீட்டிழுப்பின் போது தெரிவான அதிர்ஷ்ட எண்கள் வருமாறு:

முதலாம் பரிசு இல. 05658
இரண்டாம் பரிசு இல. 07373
மூன்றாம் பரிசு இல. 14020

ஆறுதல் பரிசில்:
13540 02093 03325 00079
09247 03633 02066

இவ் எண்களுக்குரியவர்கள் தங்கள் சீட்டுக்களை தகுந்த ஆதாரத்துடன் பாடசாலை அலுவலகத்தில் பாடசாலை நாள்களில் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை சமர்ப்பித்து பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

– செயலாளர்

பழைய மாணவர் சங்கம்,
யா/ மல்லாகம் மகாவித்தியாலயம்.

(67810)

## நெஞ்சை விட்டு அகலாத 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும்



அன்னை மகிழ்ந்திட
08 09-1926

அனைவரும் நெகிழ்ந்திட
30-06 1999

### றோஸ் ராஜேஸ்வரி பெனடிக்ற்

எம்மைப் பெற்றாய், வளர்த்தாய், பெயரிட்டாய்
நாம் மகிழ,
அகிலத்தில் எம் கண்முன்னே நடமாடும் தெய்வம்
நீங்களன்றோ?
இன்று ...... உங்கள் பிரிவினால் கலங்கி
நிற்கின்றோம்.

30 – 06 – 99 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத்தாயாரின் ஆறாத்துயரில் பங்கெடுத்து உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

இல: 14, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்.

(67806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## இனங்கண்டு நிவர்த்தி செய்க

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயல்பு நிலை மீண்டுள்ளது என்று எண்ணுவது அர்த்தமற்றதாகும். அங்குள்ள சூழல் முற்றிலும் வேறுபட்டதாகும்.

இவ்வாறு குடாநாட்டில் வாழும் மக்களின் இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தை அரசு நிறுத்துவதனை ஆட்சேபித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் நவசமசமாஜக் கட்சியின் முக்கியஸ்தரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான வ. திருநாவுக்கரசு தெரிவித்திருக்கிறார்.

யாழ் மாவட்டத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளதாகக் காரணம் காட்டி 90 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பணித்துள்ளமை முற்றிலும் நியாயமற்ற செயலாகும், என்று அவர் தமது அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இடப்பெயர்வின் பின்னர் வலிகாமம் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்றரை வருடங்கள் கடந்து விட்டபோதிலும் இயல்பு நிலை இன்னும் தோன்றவில்லை. தாம் நிம்மதியாகவும் பாதுகாப்புடனும் வாழ்வதான உணர்வு மக்களிடம் பிறக்கவில்லை.

பலவகைக் கட்டுப்பாடுகளின் மத்தியில் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மக்களின் தொழில் வாய்ப்புக் குன்றிவிட்டது இத்தகையநிலையில் அர்த்தபுஷ்டியான இயல்பு வாழ்க்கை திரும்புவது கடினம். இதில் விசேட கவனம் எடுத்துச் செயற்பட்டால் அன்றி இன்னும் பல காலத்துக்கு இன்றைய மந்தமான வாழ்க்கை நிலையே தொடரும்.

ஆனால் அரசாங்கமோ குடாநாட்டின் இயல்பு நிலை குறித்து நேரத்துக்கும் தனது தேவைக்கும் ஏற்றாற்போல் கருத்துக் கூறி வருகிறது. இடம்பெயர்ந்தோர் நிவாரணத்தை நிறுத்துவதற்குக் காரணம் காட்டும்போது குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பியுள்ளதால் அவ்வாறு செய்வதாகக்கூறமுனைந் திருக்கிறது.

ஆனால் வன்னிக்குப் போக்குவரத்துப் பாதை திறக்கக்கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் அமைதிப் பேரணியை நிறுத்தியதற்கு குடாநாட்டில் இன்னும் இயல்பு நிலை திரும்பவில்லை என்பதே காரணமாகத் தெரிவிக்கப்பட்டதாம்.

பல்கலைக்கழக மாணவர்களின் பேரணியைத் தடுத்து நிறுத்தியபோது, யாழ்ப்பாணம் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை; அதனால் இவ்வாறான பேரணிகளை அனுமதிக்க முடியாது என்று மாணவர்களுக்குக் கூறப்பட்டதாக அறியவந்தது.

இவ்வாறு அரச தரப்பினர் தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைநியாயப்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலையைத் தேவைக்கு ஏற்றவாறு மாற்றிக்காட்டுகிறது. இது கண்ணியமான செயல் அல்ல.

யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலையைச் சீராக்குவதற்கு உகந்த நடவடிக்கைகளைத் தக்கவாறு மேற்கொள்வதே அரசின் அக்கறையாக இருக்க வேண்டும். இது விடயத்தில் எங்கெங்கே அவதானிப்புடனும் கவனத்துடனும் செயற்படவேண்டும் என்பதில் அரச அதிகாரிகள் தமது சக்தியையும் திறமையையும் பயன்படுத்த வேண்டும். அதன் பொருட்டுத் தேவையான —கணிசமான— நிதி ஒதுக்கப்பட வேண்டும். குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்ய முயலவேண்டுமே அன்றி இயல்பு நிலையைச் சர்ச்சைக்குரியது ஆக்குவமில் கிடைக்கப்போவது எதுவுமில்லை.

# தேனினும் இனிய திருமுறை ஒலிக்க நடைமுறைத் திட்டங்கள் தேவை

சிவ. சண்முகவடிவேல்

ஈழமணித் திருநாட்டில் சிவபெருமானுடைய இரு திருக்கண்கள் போல இரண்டு திருக்கோயில்கள் திகழ்கின்றன. திருக்கேதீச்சரம் ஒன்று. திருக்கோணேஸ்வரம் மற்றொன்று.

இரண்டும் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற திருத் தலங்கள். திருக்கேதீச்சரத்திற்கும் திருக்கோணமலைக்கும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் தூரத்தே இருந்து இறைவனைத் தொழுது பாடினார்கள்.

''மேலான சிவகதியைப் பெறப் பக்தர்கள் பாடலாயின பத்தும் பாடுங்கள்''

**ஞானக் கதிர்**

''பத்தினையும் பாடுபவர்கள் கேட்பவர்கள் பெரியோர்களைச் சுற்றமாகக் கொள்வார்கள். அவர்கள் வானுலக வாழ்வில் பொலிந்து விளங்குவார்கள். ''நிறைவான தமிழ் பத்தும் பாடிவரக் கொடிய வினை குறுக மாட்டா'' என்று பதிகம் பாடுவதால் வரும் பயனையும் பாடியுள்ளார்கள்.

திருக்கோயில் வழிபாட்டால் பெறலாகும் பேற்றை திருப்பதிகங்களை ஓதுவதனால் பெறலாமே என்ற உண்மையையும் உணர்த்தியுள்ளார்கள். அவ்வாறான சிறப்புக்கும் மேன்மைக்கும் உரித்தாவன தேவாரத் திருப்பதிகங்களே.

திருக்கோயிலினுள் மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சிவபிரானைப் பின்வருமாறு திருமுறைகளால் போற்றித் துதித்து வரித்துள்ளார்கள்.

''தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான்

''வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்.

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேனி நற்கனகக் கிழி தருமிக் அருளினேன் காண்''

''தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

இவ்வாறு தித்திக்கும் தேன் தமிழில் பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேஸ்வரனை உள்ளம் நெக்குருகக் குழைந்து பாடுவார்கள்; புகழ்ந்து பாடுவார்கள். பாமாலை புனைந்து சாத்துவார்கள்.

இன்று நம்நாட்டின் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களால் தங்கள் நல்வாழ்வுக்கென எடுத்த திருக்கோயில்களில் திருமுறை ஒலிப்பது குறைவாகத்தான் இருக்கிறது. பொதியமலைப் பூந்தென்றல் சந்தனத்தோடு பூசி, குளிர்ந்த அருவியில் குளித்து வந்ததுபோல மனம் இனிக்க வாயினிக்க தேவாரத் திருமுறைகள் ஓதப்படும்போது அதைவிட இனிமை வேறில்லை எனலாம்.

பெருஞ்சாந்தி, மஹோற்சவப் பெருவிழா, இலட்சார்ச்சனை, மணவாளக் கோலவிழா, நவராத்திரி, சிவராத்திரி சங்குத் திருமுழுக்குப் போன்ற எத்தனையோ புண்ணிய கைங்கரியங்கள் திருக்கோயில்களில் போற்றப்படுகின்றன.

அநுக்ஞையோடு நிகழ்ச்சி அங்குரார்ப்பணம் செய்தல், ஆசீர்வாதம், ஆசார்ய உற்சவம் வரையிலான எத்தனையோ கிரியைகள் நிகழுகின்றன. எத்தனையோ மணித்தியாலங்கள் நிகழுகின்றன. இந்த நிகழ்வுகளில் எத்தனையோ ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்கின்றார்களே—தங்கள் நல்வாழ்வு கருதி ஆசார சீலர்களாக இறை அருள் வேண்டி நிற்கின்றார்களே — ஒலிக்கும் நாதத்தோடு இறையுணர்வில் ஒன்றுபட்டு உள்ளம் உருகி நிற்கும் அவர்கள் செவியில் தேனினும் இனிய செந்தமிழ்த் தேவாரங்கள் வேதமாக ஒலிக்கலாகாதா? இன்று நம் ஆலயங்களில் தேவாரம் ஒலிக்காததற்குக் காரணம் என்ன? சினிமாப் பாடல்கள் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கிவிட்டனவோ? ஏன்?

தலைச்சங்கத் தலைமைப் புலவர்—திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்! இடைச் சங்கத் தலைமைப் புலவர்—அருணதள பாதபத்ம அனுநிதமு மேதுதிக்க அரியதமிழ் தானளித்த—குன்றம் எறிந்த குமரவேள்!

இருந்தும் என்ன? பன்னிரு திருமுறைகளில் பொறுக்கி எடுத்த நாலு திருமுறைப் பாடல் தான பரிசு!

எத்தனையோ இலட்சங்களைத் திருத்தொண்டுக் காக்கித் திருவருளைப் பெருக்கி வரும் திருக்கோயிலில் ஓதுவார் ஒருவர் வாழ்க்கை நடத்துவதற்குத் திருவருள் துணை நில்லாத போது திருமுறைப் பெருமை எங்கே...? தேனினும் இனிய திருமறைகள் ஒலிக்க ஆக்கபூர்வமான நடைமுறைத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

திருமுறை ஓதுதலைத் திருத்தொண்டாகக்கொண்ட ஒரு சில குடும்பங்களாவது திருமுறைகள் மூலம் திருவருளை நம்பி வாழ்கின்றன. இந்த நிலை உருவாகின்றபோது திருமுறைக்குச் சிறப்பு திருவருள் பொலிவு. திருமுறைத் தமிழுக்கும் ஒரு தனியான உத்வேக எழுச்சி பிறக்கும். ★

# தொழில்துறைகளுடன் இணைந்த கல்வித் திட்ட செயற்பாடு தேவை

## விஞ்ஞான தின விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கல்வித் திட்டங்கள் நாட்டின் ஒருங்கிணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தின் ஒரு பகுதியாகையால் அவை கைத்தொழில், மீன்பிடி, விவசாயம், வர்த்தகம் போன்ற துறைகளுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் கே. சித்திர வடிவேலு தெரிவித்தார்.

யாழ். திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை விஞ்ஞான தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

எமது நாடு போன்ற வளர்வுறும் நாடொன்றில் எல்லா நிலைகளிலும் அறிவியல் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஒவ்வொரு மாணவனும் தன் இயற்கைச் சூழ் நிலையினை நன்குணர்ந்தவராகவும், எப்பிரச்சினையையும் விஞ்ஞான முறையில் சிந்தித்து விடை காணும் ஆற்றல் உடையவராகவும் விளங்க வேண்டும்.

ஏட்டுக்கல்வியை உயர்வாகவும் கைத்தொழில் விடயங்களை இழிவாகவும், தவறாகவும் மதிக்கும் தன்மை மாறி கைகளைக் கொண்டு வேலை செய்வதற்கு ஏற்ற மனப்பாங்கினை இளம் சந்ததியினர் மனதில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

எமது பிரதேசம் பொருளாதாரத்தில் தன்னிறைவு எய்துவதற்கு, இப் பகுதியிலுள்ள இயற்கை வளங்களைத் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும். எமது இயற்கை வளங்களுள் கடல்வளம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஆழ்கடலே மிகப் பெரிய உயிரியியல் சூழல். அதன் பல விடயங்கள் இன்னமும் நன்றாக அறியப்படவில்லை. இவைகள் பற்றியபல விடயங்கள் இன்னமும் விஞ்ஞானிகளுக்கு சவாலாக இருக்கின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [ஐ-5]

## விஞ்ஞான பொது அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான பொது அறிவுப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ—9)

## நாளை

ஆடி 15

சனிக்கிழமை

திதி: திருதியை

பிற்பகல் 5.14 வரை.

நட்சத்திரம்: சதயம்

மாலை 5.50 வரை.

சுபநேரம்: 3.03 – 4.33

ராகுகாலம்: 9.03 – 10.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சர்வ சக்தி வாய்ந்த கடவுளுடைய அருள் வந்தடையும் போது ஒவ்வொருவனும் தன் குற்றங்களைக் காண்பான்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இணுவில் — கோண்டாவில் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் (காரைக்கால் சிவன்) கோயில் உற்சவத்தின் திருக்கல்யாணப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் பெரிய புராணம் பற்றி தொடர் சொற்பொழிவாற்றிய யாழ். இந்துக்கல்லூரி மாணவன் இரத்தினசிங்கம்சர்வேஸ்வரா அன்றைய தினம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார்.

(ஐ-6)

★ ★ ★

அரியாலை — பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதிகாலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (க)

★ ★ ★

பளை இத்தாவில் முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன் அன்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறும்.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று தீர்த்த உற்சவமும் மறுநாள் பூங்காவன உற்சவமும் இடம் பெறும், (ஐ-117)

## விவசாயிகளுக்கு மரக்கறி விதை

யாழ்ப்பாணம், ஜூலை 30

உணவு விவசாய நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் மேலும் ஆயிரத்து 200 விவசாயிகளுக்கு மரக்கறி விதை மற்றும் விவசாய உபகரணங்கள் பெரும்போகச் செய்கையின் போது வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

ஏற்கனவே இரண்டாயிரம் விவசாயிகளுக்கு மரக்கறி விதைகளும். விவசாய உபகரணங்களும் விவசாய நிறுவனத்தினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ5-17-)

## வீராங்கனைகட்கு பாராட்டு விழா

நெல்லியடி, ஜூலை 30

வடக்கு—கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் திருகோணமலையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வடமராட்சி வலய பாடசாலைகளைச் சேர்ந்த வீராங்கனைகளைப் பாராட்டி கௌரவிக்கும் விழா நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு பருத்தித்துறை பர்வதவர்த்தனி மண்டபத்தில் ம. சூரியகுமாரன் தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராகவும். பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி செல்வரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எம். மயிலேறும் பெருமாள், பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எம். வேதாபரணம் உட்பட இன்னும் பலர் பாராட்டுரை வழங்குவர்.

(ஐ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். குடாநாட்டில் இருந்து கொழும்புக்கு விமானம் மூலம் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெற்றவர்களின் விவரம் உதயனில் தொடர்ந்து வெளியாவது தெரிந்ததே. இவர்களில் ஜூலை 20 ஆம் திகதி வரை அனுமதி பெற்றவர்களின் விவரம் இன்றுமுதல் வெளிவருகின்றன.

### கோப்பாய்

எஸ். சிவஞானம் (089369 ஏ), ஆர். கீதா (096862ஏ), எஸ். முருகமூர்த்தி (096873 சீ), ஐ.அழகரட்ணம் 096953 ஏ), என். குமாரசிங்கம் (096964ஏ), வீ. சபாரட்ணம் (096967ஏ), எஸ்.றம்மி 096967 பீ), கே. வேலுப்பிள்ளை (096969 ஏ), ஆர். குமராசு (096975 ஏ), ரீ. அதியமான் (096978 ஏ), எஸ். கமலாம்பிகை (096979 ஏ). எஸ். ரவிச்சந்திரன் (097042 ஏ), எஸ். சுரேஸ் (097042 பீ), எஸ். சிவாஜினி (097042 சீ), கே. சின்னத்துரை (097153 ஏ), எஸ். ரூபி (097157 ஏ), எல். கீர்த்திகா (097157 பீ), எஸ்' தம்பிராஜா (097191 ஏ),

ரீ. யோகமலர் (097191 பீ), ரீ. சுஜீதன் (097191 சீ), ஏ. சுபத்ராதேவி (097271 ஏ), ஏ. ஜெயமகள் (097271 பீ), கே. நாகராஜா (097690 ஏ), எஸ். நாகேஸ்வரி (097594 ஏ), ஜி. கிருஷ்ண கில்மர் (097694 ஏ), கே. கிரிஷா (097694 பீ): கே. கே. டிரோஷா (097694 சீ).

எஸ்.சிவபாக்கியம்(097697 ஏ),பீ. விநோத் (097697பீ), பீ. சஞ்சீவன் (097697 சீ) ஜி. ரஞ்சிதமலர் (097699ஏ), ஜி. ரஞ்சிதமலர் (097699பீ), ஏ. குமரகுரு (097722 ஏ), ஏ. புனிதவதி (097725 ஏ) ஏ. கலைவாணி (097725 பீ), எஸ். தனலக்சுமி(097779ஏ), பீ.சின்னத்துரை(097779பீ), ஏ. ஆறுமுகம் (097781 ஏ).

வை. பாலசிங்கம் (092778 ஏ), எஸ், எஸ். ஜெயந்திநாதன் (097784ஏ). எஸ். சிவாகினி (097784பீ), ரீ. நிரஞ்சன் (097794ஏ), ஆர். சுந்தரலிங்கம்(097803ஏ) கே. குலசிங்கம் (097804ஏ), பீ. சண்முகம் (097806ஏ), வீ. சுலோசந்திரி (097816ஏ), ஆர். நாகரஞ்சினி(097816சீ) ஆர். சபேசன் (097825ஏ),

கே. வேலாயுத பிள்ளை (097856ஏ), கே. ஜெயாதரன் (097872ஏ). கே. ஞானாம்பிகை (097872பீ), ஜீ. மாணிக்கம் (097876 ஏ), ஜி. விக்னேஸ்வரி(097876பீ), ஜி. டிலுமன்(097876சீ), கே. பரமசிவன் (099860ஏ), கே. அருளேஸ்வசாகர்(099861ஏ) ஏ. தயாகரன் (099861பீ) ஆர். ருடாந்த் (099862ஏ).

எஸ். சோமசுந்தரம் (099863 ஏ), பீ. ராமநாதன் (099881 ஏ), ஆர். செல்வகுமார் (099881 பீ), ரீ. கந்தையா (099893 ஏ), கே. கந்தையா 099893 பீ), ஆர், சகுந்தலாதேவி (099970 ஏ) கே. நாகரதம் (099970 பீ), எஸ். தயாகுல (099984 ஏ), எஸ். ராமுப்பிள்ளை (099996 ஏ), எம். நடராஜா (100021 ஏ), ரீ. விக்னேஸ்வரன் (100044 ஏ), எஸ். சின்னத்துரை (100044 பீ), கே. சிவதாசன் (101669 ஏ), கே. வள்ளிப்பிள்ளை (101669 பீ), வீ, சிவனேஸ்வரன் (101675 ஏ), எஸ். வைரமுத்து (101740 ஏ), எம். ராஜேஸ்வரன் (101743ஏ. ராஜேஸவரன் 101743 பீ)

ரீ. ராஜேஸ்வரன் (101743 சீ), எஸ். பதீஸ் (101744ஏ), எஸ். ரவீந்தினர் (101750 ஏ), ஆர். சிவநந்தி (101750 பீ), கே. சிவசோதி (101752 ஏ), ஈ. ராஜநாயகம்(101799 ஏ), ஆர். றதிஸ்வரி (101799 பீ), ஆர். ஜனகன் (101799 டீ), ஆர். ஜனகன் (101799 சீ), ஏ. சுப்ரமணியம் (101810ஏ).

எஸ். சிவபாக்கியம் (101810 பீ), எஸ். கோகுலன் (104049 ஏ), ரீ. பிறைசூடி (104054 ஏ), பீ. சத்தியவாணி (104054 பீ), எஸ். கிட்ணன் (104057 ஏ), ஆர். முகுந்தன் (104063ஏ), எம். கௌரி (104063பீ), எம். சீதாராம் (104063 சீ), எஸ். சுரேஷன் (104064ஏ), ரீ. கௌரி (104065 ஏ).

ரீ. லக்சன் (104065 பீ), எஸ். கந்தையா (104066 ஏ), எஸ். செல்வரட்ணம்(104066 பீ),பீ. தெய்வானைப்பிள்ளை (104067 ஏ), பீ. சேனாதிராஜா (104067 பீ), என். செல்வநாயகம் (104068 ஏ), எம். திசிங்கம் (104070 ஏ), ரீ. சிறிஸ்வரன் (104070 பீ), பீ.செல்வராஜா(104089ஏ),. எஸ். கோபிகா (104089பீ),

எச். ரஞ்சித்அமீர் (104099 ஏ), எஸ். சிவஞானம் (104100 ஏ), எஸ். இன்பமலர் (104107 ஏ), எம். எம் விஜிதா (104117 ஏ), வீ. சுந்தாம்பாள் (104118 ஏ), எஸ். அருள்பிள்ளை (104119 ஏ), ரீ. சுகுணா (104121பீ)2 பீ. ரட்ணசிங்கம் (10412, ஏ), வீ. ராசேஸ்வரன் (104130 ஏ), பீ. ராஸ்லன் (104132 ஏ),.

ஏ. டபிள்யூ. நடராஜா (104133ஏ), வீ. உதயசங்கர் (104134ஏ), ரீ. குணராஜா (104139ஏ).எஸ்.லிங்கராசா (104144ஏ), கே. செல்வராஜா (104163ஏ), எஸ். நாகர்சஜயர் (104257ஏ), கே. சின்னத்தம்பி (104455 ஏ), வீ. நவரட்ணம்(107605 ஏ), வீ. நவரட்ணம்(107600 பீ), வீ. நவரட்ணம்(107629 ஏ), எஸ். கணபதிப்பிள்ளை (107634ஏ),

எஸ். பூவராணி (107634 பீ), ஏ.தவதாஸ்(107640ஏ), ரீ.கதிரன் (107650ஏ), ஜே. தவராணி (107793ஏ), பீ. தங்கரட்ணம் (109622ஏ), என்.நவரட்ணம் (109689ஏ), எஸ் நடராஜா (109700ஏ), கே.ஆனந்தராஜா (110020 ஏ), ரீ.பிரகாஷ் (110020பீ), எம்.சிவரட்ணம் (1100 9ஏ), என்.ஆச்சிப்பிள்ளை (119500 ஏ), சியாமதி (119500பீ). என். ஞானகரன்(119500சீ),

[தொடரும்]

# தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வியை இடையில் கைவிடுவோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களிடையே கற்கை நெறியை இடையில் கைவிட்டு வெளியேறுவோர் வீதம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களில் 20முதல் 25 சத வீதமான மாணவர்கள் தமது கற்கை நெறியை இடையில் கைவிட்டுச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்கலைக் கழகத்துக்கு தெரிவாவோர் மற்றும் கல்வி கற்கும்போது வேலை வாய்ப்புப் பெறுவோர் போன்றவர்களே இவ்வாறு இடையில் விலகுகின்றனர் என்று கூறப்பட்டது.

இவ்வாறு கற்கைநெறிகளை இடையில் கைவிடுவோரால் உண்மையில் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்களது வாய்ப்புக்கள் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பல்கலைக் கழகத்துக்கு தெரிவாவோர் மற்றும் வேலை வாய்ப்புக்கள் பெறுவது உறுதிப்படுத்தப்பட்டோர் ஏனைய மாணவர்களது வாய்ப்புக்களை பாதிக்காத வகையில் நடந்து கொள்ளுமாறு நிறுவனத்தின் பயிற்சி இயக்குநர் கேட்டுள்ளார்,

(ஐ-6)

# தாச்சிப்போட்டி இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு பல்கலைக் கழக விளையாட்டு அவை நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று மாலை பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

பெண்கள் பிரிவு ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து ஜெயபாரதி வி.க அணியும் —

ஆண்கள் பிரிவு ஆட்டத்தில் மாலை 5 மணிக்கு தென்றல் வி.க அணியை எதிர்த்து சாந்தவிநாயகர் வி.க அணியும் —

போட்டியிடவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் அ, சண்முகதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-6)

# சுன்னாகம் பஸ் நிலையம் விஸ்தரிக்கப்படும்

சுன்னாகம் பஸ் நிலையம் நவீனமயப்படுத்தப்பட்டு புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டுள்ளதாக வலிகாமம் தெற்குபிரதேச சபைத் தலைவர் தி.மா. செல்வராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளருடன்கலந்துரையாடப்பட்டு, அவர்களது ஆலோசனைக்கு அமைவாக புதிய பஸ் நிலையம் அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கென ஐந்து லட்ச ரூபா செலவு செய்யப்படுமெனமதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை —

மீன் சந்தை அருகாகச் செல்லும் சந்தை தெற்கு வீதியை அகலித்துத் திருத்தம் செய்யப்பட்டு, பஸ்கள் அவ்வீதி வழியே பஸ்தரிப்பு நிலையத்துக்கு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்அவர் தெரிவித்தார்.

(ஐ-27)

# நூல் வெளியீடு

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலக வே. அம்பிகைபாகன் எழுதிய ''முறைசாராக் கல்வியில் புதிய பயிற்சி நெறிகளை அறிமுகம் செய்தல்—ஓர் எண்ணக்கரு'' என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-9)


## கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
## கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
## கந்தமுருகேசனார் 'நாவலன் கோவை'
## ஆய்வரங்கு

இடம்: யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.

காலம்: 1999 – 08 – 01 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி

தலைவர்: திரு. வ. செல்வராசா, கல்விப்பணிப்பாளர்
தலைவர் – கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்

ஆய்வுரைகள்:

1. இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா B. A. Hons.
2. பண்டிதர் க. சச்சிதானந்தன் B. A. Hons, M. Litt.
3. பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கம் B. A. Hons.
4. வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) M. A.

ஆர்வலரை அன்புடன் அழைக்கின்றோம்,

தலைவர்
கட்டைவேலி–நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்,
கரவெட்டி.
([illegible])



## மனைப் பொருளியல்
## நூல் வெளியீட்டு விழா

புடைவையும் உடை அமைத்தலும்
பரீட்சை வழிகாட்டி
ஆண்டு 10-11 இற்குரியது

இடம்: சங்கானை சைவப்பிரகாச ம.வி.
காலம்: 31 — 07 — 1999 சனிக்கிழமை
காலை 9.00 மணி

நூல் வெளியிடுபவர்: திரு. வீ. இராசையா
(கல்விப் பணிப்பாளர் கல்வி லலயம் வலிகாமம்)

இதுவரையும் அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத, வலிகாமம் கல்வி வலயத்தில், மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பத்திரிகை மூலமான அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

செல்வி சிவசக்திதேவி சதாசிவம்
நூலாசிரியர்
(விழா அமைப்புக் குழுவினர் சார்பாக)

நூல் வெளியீட்டின் பின்னர் நூல் பெறவேண்டிய இடங்கள்

ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

லக்சுமி புத்தகசாலை
சித்தன்கேணி (67821)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையைத் திறக்க முடியாவிட்டால் மாற்று ஏற்பாடுகளைச் செய்க

## இந்துப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

வன்னிக்கான பாதையைத் திறக்கமுடியாத பட்சத்தில் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாக மாற்று ஏற்பாடுகள் செய்து பசியாலும் பட்டினியாலும் வாடும் மக்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

வடபிராந்திய இந்துப் பேரவை மேற்கண்ட அவசர கோரிக்கையை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசங்களில் நிரந்தரமாக வதியும் மக்கள் மற்றும் இடம் பெயர்ந்து வதியும் மக்கள் அனைவரும் இலங்கையின்குடிமக்களே. அவர்களுக்குஉணவு உடை உறையுள் மற்றும் அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுடையதே. அப்பகுதி மக்கள் எல்லோரும் இந்த யுத்த சூழலை விரும்பி ஏற்றவர்கள் அல்லர். எனவே அப்பகுதியில் வதியும் மக்களுக்கானஉணவு, உடை, உறையுள் சுகாதார வசதிகள் உட்பட அடிப்படை வசதிகளை அரசு அவசியம் வழங்கியாக வேண்டும்.

கடந்த பல வாரங்களாக வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டு அத்தியாவசிய தேவைகளை அவர்கள் இழந்திருப்பது ஆழ்ந்த வேதனைக்குரியது. அரச படைகள் யுத்தம் செய்யலாம். போக்குவரத்துத் தொடர்பான தகராறுகள் ஏற்படலாம். ஆனால் அரசு அப்பகுதி மக்களின் அத்தியாவசிய சேவைகள் இழந்திருக்கும் நிலைமையை அனுமதிக்கக் கூடாது.

எனவே, உடனடியாக போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறந்து வன்னிப் பகுதிக்கு உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய சேவைகளை வழங்க வேண்டும். பாதையைத் திறக்கமுடியாவிட்டால், சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் ஊடாக மாற்று ஏற்பாடுகளை ஆலோசித்து அங்கு பசியாலும், பட்டினியாலும் அத்தியாவசிய வசதிகள் அற்று வாழும் மக்களை காப்பாற்ற முன்வரவேண்டும் — என்றுள்ளது

(இ-3)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

வலிகாமம் வலயத்தில் நேற்றும் இன்றும் நடத்த ஏற்பாடாகியிருந்த ஆங்கில தின நாடகப்போட்டிகள் யாவும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-3]

## பாதை திறக்கப்படாதது

# அடிப்படை மனித உரிமை மீறல் எனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வன்னிக்கான போக்குவரத்துப் பாதையைத் திறக்காதது மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்பாதது ஆகியவை அடிப்படை மனித உரிமை மீறும் செயலாகும் என்று தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் புவியியல் துறைப் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் ஓய்வூதியப் பிரச்சினை மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை ஆகியவை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் குரல் கொடுப்பது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தீர்மானம் அடங்கிய கடிதம் ஜனாதிபதி, மனித உரிமை அமைப்புகள், பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

(இ-5)

# பரீட்சைக்கு முன் பாதையை திறக்க நடவடிக்கை எடுக்குக

## புளொட் அமைப்புக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பமாக விருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி வன்னிப் பகுதிக்கான பாதையை திறக்க சம்பந்தப்பட்ட இருதரப்பும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்கண்டவாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் அமைப்பு) நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த விடயத்தில் மனித நேய அமைப்புகள்தலையிட்டு எதிர் காலத்தில் இது போன்ற தடைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னிப்பகுதிக்கானதரைப் பாதை விவகாரம் மனித நேயத்தை மதிக்கும் அனைவர் மத்தியிலும் ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் வன்னிப் பகுதி இன்னொரு சோமாலியாகவோ அல்லது எதியோப்பியாகவோ மாறக் கூடிய சூழ்நிலை உருவாகி வருவதாக எண்ண வைத்துள்ளது.

கடந்த ஒருமாத காலமாக இந்த பாதை மூடப்பட்டுள்ளதால் அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்துவம், எரிபொருள் போன்றவற்றுக்கு பெரும் தட்டுப்பாடும் சில பொருள்கள் அறவே இல்லாத நிலையும் காணப்படுகிறது.

இது தொடர்பாக பலவெகுஜன அமைப்புகள் நடத்திய போராட்டங்களுக்கு கூட சம்பந்தப்பட்ட தரப்புகள் விட்டுக் கொடுக்காது தமது இராணுவ நலனை நோக்கி செயற்படுவதை விடுத்து மனிதாபிமான ரீதியில் செயற்படுமாறு வேண்டுகின்றோம்

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

# கார்கில் விவகாரத்தில் பாகிஸ்தானின் தோல்வி இந்தியாவுக்கு கிடைத்துள்ள தார்மீக வெற்றி

## கருத்தரங்கில் உரை

திருநெல்வேலி ஜூலை 30

'இந்தியாவின் புவிசார்ந்த விடயங்களில் தொடர்புடைய அடையாளமாக காஷ்மீர் பிரச்சினை இன்று முன்வைக்கப்படுகின்றது மிகவும் சிக்கலான இப்பிரச்சினையை மூன்றாம் தரப்புக்கு எடுத்துச் செல்லப்படுவதை இந்தியா விரும்பவில்லை. காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தி மூன்றாம் தரப்பின் தலையீட்டுக்கு கொண்டு வருவதற்கு பாகிஸ்தான் போட்ட திட்டம் படுதோல்வியில் முடிந்தது. இது இந்தியாவுக்கு கிடைத்ததொரு தார்மீக வெற்றி என்று குறிப்பிடலாம்''

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய முழு நிலாநாள் கருத்தரங்கில் 'காஷ்மீர் பிரச்சினைகளும் அதன் அண்மைக் கால தாக்கங்களும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ச. சத்தியசீலன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமையில் கடந்த புதன் கிழமையன்று பிற்பகல் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பேராசிரியர் சத்தியசீலன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

காஷ்மீரின் வரலாற்றை நோக்கும் போது அது மற்ற எந்தவொரு நாட்டையும் ஒப்பிட்டுக் கூறமுடியாத வேறுபட்ட — தனித்துவமிக்கதொன்றாக உள்ளது. கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இந்து அரசரின் ஆட்சியிலிருந்து வந்த காஷ்மீர் 15 ஆம் நூற்றாண்டில் மொகலாய மன்னரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. பின்னர் வட பகுதியிலுள்ள ஆப்கானிஸ்தானின் ஆதிக்கத்தின் கீழும்சீக்கியரின் ஆதிக்கத்தின் கீழும்வந்தது. பின்னர் இந்தியாவை தனது ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்தபிரித்தானியர்கள் ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தை அங்கு சிறுபான்மையினராக இருந்த இந்து மக்களிடம் கையளித்தனர். இதேவேளை 'அஸாத் காஷ்மீர' என்றழைக்கப்படும் பிரதேசம் பாகிஸ்தான் வசம்கொடுக்கப்பட்டது.1947 ஆம் ஆண்டில் ஜம்மு இளவரசர் இந்தியாவுடன் செய்து கொண்ட 370 ஆம் சிறப்பு உரிமை ஒப்பந்தப்படி காஷ்மீர் பிரதேசம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.1948 ஆம் ஆண்டில் முதல் முதலாக காஷ்மீர் உரிமை விடயமாக பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் யுத்தம் ஏற்பட்டது. இதனை அடுத்துதற்காலிகமாக எல்லைக் கோடு ஏற்படுத்தப்பட்டது. இது தெளிவற்ற நிலையில் இருந்ததால் 1968 ஆம் ஆண்டில் நடந்த இரண்டாவது யுத்தத்தில் பாகிஸ்தானுக்கு தோல்வி ஏற்பட்டது. பின்னர் 'சிம்லா' உடன்படிக்கையின் படி இரு நாட்டு இராணுவத் தளபதிகளிடையே நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையின் பிரகாரம் தற்போதைய எல்லைக் கோடுவரையப்பட்டது. இதனை பாகிஸ்தான் ஏற்கவில்லை என்று இப்போது கூறப்படுகின்றது. காஷ்மீர் முழுவதும் தனது பிரதேசம் என்று பாகிஸ்தான் வாதிட்டு வருகின்றது. பாகிஸ்தான் வசமுள்ள அஸாத் காஷ்மீரில் மத அடிப்படை வாத ஒற்றையாட்சி அரசியல் முறை மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் இந்தியாவில் சமஷ்டி முறையிலான ஆட்சி மத சார்பற்ற முறையில் இருந்து வருகின்றது. இதேவேளை இந்திய காஷ்மீர் பிரதேசத்தில் சுயாட்சி கோரிபோராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன, பல தீவிரவாத இயக்கங்கள் அங்கு தோன்றின ஆரம்பத்தில் மூன்று முக்கிய தீவிரவாத இயக்கங்கள் அங்கு இருந்தபோதிலும் இறுதியில் 43 விடுதலைப் போராட்ட இயக்கங்களாக அவை அதிகரித்தன. இந்த தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கிய வேளையில் இந்தியாவும் தன் பங்குக்கு சில தீவிரவாத இயக்கங்களை தனது கட்டுப்பாட்டின்கிழ் வைத்திருந்தது. 1970 களில் காஷ்மீரில் முக்கிய தீவிரவாத இயக்கப் போராளிகள் கைதுசெய்யப்பட்டதை அடுத்து மடிந்து போயிருந்த இஸ்லாமிய தீவிரவாதம் பின்னர் மீண்டும் தலை தூக்கியது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் இவை தாக்குதல்களை அடிக்கடி மேற்கொண்டு வந்துள்ளன.

கடந்த இரு மாதங்களாக பாகிஸ்தானிய ஊடுருவல் காரர்களுடன் நடத்தப்படும் போரில் இந்திய இராணுவம் முக்கிய வெற்றிகளைப் பெற்றுள்ளதுடன் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெற்றுள்ளது. 'ஒப்பரேஷன் விஜய்' இராணுவ நடவடிக்கைகள் வெற்றியடைந்த போதிலும் தொடர்ந்தும் தீவிரவாத ஊடுருவல்காரர்களின் அச்சுறுத்தலை எதிர் நோக்க வேண்டிய நிலையில் இந்தியா உள்ளது ஆனால் இந்தியாவின் பொருளாதாரபலம், ஆள்பலம் என்பனவற்றுக்கு பாகிஸ்தானினால் நீண்ட காலத்திற்கு ஈடுகொடுத்து தாக்குப் பிடிப்பது கஷ்டம் என்பதையும் மறந்து விடலாகாது. அத்துடன் அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் ஏன் பாகிஸ்தானில் நட்பு நாடு என்று கருதப்பட்டுவரும் சீனா கூட பாகிஸ்தானின் ஊடுருவல் நடவடிக்கையை கண்டித்துள்ளது இந்தியாவுக்கு கிடைத்ததொரு தார்மீக வெற்றியாகும்,

இந்தியப் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள இக் காலகட்டத்தில் காஷ்மீர் போரில் ஏற்பட்ட வெற்றிகள் வாஜ்பாய் அரசின் தேர்தல் வெற்றிக்கு பெரும் உறுதுணையாக — சாதகமாக — இருக்கப் போவது நிச்சயம் இப்போரின் நடவடிக்கைகள், இராணுவத்தாக்குதல்கள் மக்கள் இராணுவ நடவடிக்கைக்கு அளித்துவரும் பேராதரவு என்பன எல்லாம் வானொலி தொலைக்காட்சி மூலம் அடிக்கடி இந்திய மக்களுக்கு முற்றுமுழுதாக பிரச்சாரப்படுத்தப்பட்டு — காண்பிக்கப்பட்டு — வருவதை அவதானிக்கலாம். இந்திய மண்ணோடு ஒட்டாத நிலையிலுள்ள காங்கிரஸ் கட்சிக்கு தேர்தலில் பின்னடைவே கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம் — என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை முதுநிலை விரிவுரையாளர் ஏ. சூசை ஆனந்தன் 'இந்திய — பாகிஸ்தான் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோடும் அதன் புவியியற் பின்னணியும்' என்ற தலைப்பில் உரையாற்றுகையில் கூறியதாவது:-

'இந்தியாவின் வடபகுதியில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சீனா ஆகிய நாடுகளை எல்லைப்புறங்களாகக் கொண்டதுகாஷ்மீர்மாநிலம். மலைகளாலும், பனிமலைகளாலும் சூழப்பட்ட காஷ்மீர் உல்லாசப்பயணத்திற்கு பிரசித்திபெற்ற இடமாக புகழ்பெற்று விளங்குகின்றது. கம்பளி உற்பத்தி பயிர்ச் செய்கை மந்தைவளர்ப்பு என்பன இங்கு மக்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஏனைய தொழில்கள் இலங்கையைப் போல நான்கு மடங்கு விஸ்தீரணம் கொண்ட காஷ்மீரில் 70 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். தற்போதுள்ள யுத்த நிலையில் எல்லைக் கோட்டிற்கு சமீபமாகவுள்ள முஷ்கோ, டிராஷ் பட்டாலிக் ஆகிய பகுதிகளில் உயர்ந்த மலைகளின் சிகரங்களில் இருந்து பாகிஸ்தானிய ஆதரவு பெற்ற ஊடுருவல்காரர்கள் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகின்றது. உள்நாட்டில் தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்புணர்வுகளை சமாளிக்க பாகிஸ்தான் அரசு ஊடுருவல்காரர்களுக்கு மறைமுகஆதரவை தொடர்ந்தும் வழங்கி வரும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது — என்றார்.

டாக்டர் எஸ். யோகேஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

(ஐ-135)

## லண்டனில் திருமுருகனுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 30

தெய்வீக உரை நிகழ்த்துவதற்காக லண்டன் சென்றிருக்கும் 'செஞ்சொற்செல்வர்' ஆறுதிருமுருகன் இன்று லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் வைத்து கௌரவிக்கப்படவிருக்கின்றார்

லண்டனில் உள்ள இணுவையூர் மக்களின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு கலாநிதி செல்லத்துரை ஆனந்தவரதன் தலைமை வகிப்பார்.

இந்த வைபவத்தில் பலர் பாராட்டுரைகள் வழங்கவிருக்கின்றனர்.

(இ-3)

## மெய்வல்லுநர் போட்டிகள்

சுன்னாகம், ஜூலை 30

பலாலி ஆசிரிய கலாசாலையின் உள்ளக மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளி காலை 9 மணிக்கு நடைபெறும்.

கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் முன்னாள் உடற்கல்வி விரிவுரையாளர் திருமதி நேசனகலிங்கம் முதன்மை விருந்தினராகவும், முன்னாள் பிரதி அதிபர் பிரான்சிஸ் சென்றோச் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

(ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் வலயக் கல்வி அலுவலகம் முன்பாக நேற்று அதிபர்கள், ஆசிரியர்கள் அமைதிப் போராட்டத்தில் சுலோக அட்டைகளுடன் பங்குகொண்ட சமயம் எடுக்கப்பட்ட படம்.
படம் எஸ். மணிவண்ணன்

## அதிபர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)
மாகாணக் கல்வியமைச்சு அளித்த உறுதி மொழியை அடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவுக்கான உத்தரவுகள் இன்று மாகாணக் கல்வியமைச்சில் வழங்கப்படும்போது ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேரடியாகச் சமுகமளித்து இருக்கவும் முடிவாகியுள்ளது.

ஆசிரிய சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைக் கொடுப்பனவை அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன் வழங்கவும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இடர்காலக் கொடுப்பனவு மற்றும் சம்பளப்பாக்கி தொடர்பாக நடத்திவந்த போராட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளதையடுத்து மறியல் போராட்டம் மற்றும் ஜி. சீ. ஈ. (உயர் தர) பரீட்சையைப் பகிஷ்கரித்தல் தொடர்பான போராட்டம் ஆகியன கைவிடப்பட்டுள்ளன என்று மகாசிவம் தெரிவித்தார்.

அதேநேரம் — இந்த விவகாரம் தொடர்பாக நேற்று அமைச்சரவையில் ஆராயப்பட்டது என்றும் —

இதற்கான கொடுப்பனவை வழங்க ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார் என்றும் — முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார். (இ-3-7)

## ஜனாதிபதி...

[முதலாம் பக்கத் தொடர்]
இரு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீலன் திருச்செல்வத்தின் பூதவுடல் இன்று அவரது வாசஸ்தலத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படும்.

நாளை பிற்பகல் அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெறும். (இ-3-7)

## கண்டனம் ..

(முதலாம் பக்கத் தொடர்)
விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் பேரதிர்ச்சியைத் தந்துள்ளது.

நீலன் திருச்செல்வம் ஒரு நிதானமான மிதவாத அரசியல் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தவர். இந்த நாட்டின் பல்லின, பல் கலாசார, பன்மொழித் தன்மைக்கேற்ப அரசியல் சாசனத்தின் கட்டமைப்பில் ஆக்கபூர்வமான அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்துவதற்குத் தன்னை அர்ப்பணித்து உழைத்தவர்.

அவரது அகால மரணம் தமிழ் பேசும் மக்களுக்கும், நாட்டுக்கும் அளவிடமுடியாத இழப்பாகி விட்டது. அவரது இழப்பினால் ஏற்பட்டிருக்கும் வெற்றிடம் நிவர்த்தி செய்ய முடியாத ஒன்றாகும்.

இந்த மனிதாபிமானமற்றதும் இரக்கமற்றதுமான கொலையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கிறது. இது போன்ற அர்த்தமற்ற கொலைகளால் உருப்படியான எவ்வித அடைவையும் எய்தமுடியாது.

துக்ககரமான இந்த இழப்பு நாட்டின் தேசியப் பிரச்சினையைச் சுமூகமான அரசியல் தீர்வின் மூலம் தீர்க்கவேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தி நிற்கின்றது—என்றுள்ளது.

அதே சமயம் தமிழ்க் கட்சித் தலைவர்களும், பொது அமைப்பினரும் இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-3-6-7)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்)
யினர் தமது முகாமுக்கு வந்தனர் என ரெலோ அமைப்பினர் தெரிவித்தனர்.

இதேவேளை ரெலோ அமைப்பைச் சேர்ந்த மூன்று பேரைத் தாம் கைது செய்துள்ளதாக வவுனியாவில் படை வட்டாரங்கள் ;| வித்தன. (இ-7-164)


# வன்னி மக்களுக்கான
## இறை வேண்டல்
## ஒன்று கூடல்

01 - 08 - 1999

உணவின்றி, மருத்துவ வசதிகள் இன்றி மடியும் நிலையில் உள்ள வன்னி மக்களுக்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10-12 மணி வரை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒன்றுகூடி செபிக்க, எமது மறை மாவட்டத்திலுள்ள குருக்கள், துறவிகள், பொது நிலையினர் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

பெருந்திரளாக இந்த ஒன்று கூடலில் பங்கு பற்றி துன்புறும் வன்னி மக்களுடனான எமது தோழமையை வெளிப்படுத்துவோம்.

அருள்திரு, J. P, E. செல்வராஜா
குருமுதல்வர்

ஆயர் இல்லம்
29 - 07 - 1999
(சி/8357)


## பொது அறிவு கட்டுரைப் போட்டிகள்

தென்மராட்சி, ஜூலை 30

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினரால் ஆத்ம ஜோதி நா. முத்தையா அவர்களின் நினைவு தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் நாளை சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை சாவகச்சேரிப் பிரிவு மாணவர்களுக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிலும், பளை, கொடிகாமம் பிரிவு மாணவர்களுக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான மாலை கட்டும் போட்டிகள் ஒகஸ்ட் ஏழாம் திகதி சனிக்கிழமை மேற்படி நிலையங்களில் நடைபெறுமென சங்க செயலாளர் ந. வைரமுத்து அறிவித்துள்ளார். (இ-117)



யாழ். வலய கல்வி அலுவலகம் முன்பாக நேற்று இடம்பெற்ற அமைதிப் போராட்ட முடிவில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் யாழ். கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளையிடம் மகஜர் கையளிக்கும் போது எடுக்கப்பட்ட படம்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்)
ஆரம்பமான இந்தப்போராட்டம் பகல் ஒரு மணி வரை அமைதியாக நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் இ.ஜோ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த அமைதி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் ஆசிரியர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பட்டினிச் சாவில் இருந்து வன்னி மக்களைக் காப்பாற்ற சர்வதேச சமூகமே விழித்தெழு, பசிபட்டினி, இடம்பெயர்வு, குண்டுத்தாக்குதல் மத்தியிலும் வாழும் எம் உறவுகளைக் காப்பாற்று, மனிதாபிமானம் பற்றி குரல் கொடுக்கும் சர்வதேச சமூகமே வன்னி மக்களின் பேரவலம் உன் கண்களுக்குத் தெரியவில்லையா? என்ற வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மாணவர்கள் இந்த அமைதிப் போராட்டத்தை நடத்தினர்.

இந்த நிகழ்வின் இறுதியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் எஸ். ஐங்கரன், பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜூடி ரமேஸ் ஜெயக்குமார், முல்லைத்தீவு மாவட்டமாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். தயாபரன், விஞ்ஞான பீட மாணவர் மன்றத் தலைவர் டி. ஜெயந்தன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ், கலாராஜ் ஆகியோர் வன்னி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி கருத்துரைகள் வழங்கினார்கள். (இ-5-ரி)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

- நெஞ்சினிலே (பிரமிட் CD)
- நீயா
- கூலி
- மகாபிரபு
- உத்தமன்
- பணக்காரக்குடும்பம்
- பணம் படைத்தவன்
- விக்கிரமாதித்தன்
- ராஜா தேசிங்கு
- ராமன் தேடிய சீதை
- தேடிவந்தமாப்பிள்ளை
- சிரித்து வாழ வேண்டும்
- சங்கே முழங்கு
- குமரிக்கோட்டம்
- காவல்க்காரன்
- நம் நாடு

வீடியோ விஸன்
யாழ்ப்பாணம்.
(சி/8359)


## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்)
250 மீற்றர் தூரத்துக்கு வீசப்பட்டன.

அவரது உடலும் சிதறிக் காணப்பட்டது,

அதன் பின்னர் நீலனினதும் தற்கொலைக் குண்டுதாரியினதும் சிதறிய உடல்கள் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தற்கொலைக் குண்டுதாரியின் முகம் உருப்படியாக அடையாளம் காணக்கூடிய வகையில் இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்)
நேற்றுஸ்தம்பிதம்அடைந்தன யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள் தத்தமது வலய அலுவலகங்களில் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். கல்வி வலய அலுவலகத்தில் நேற்றுக் காலை 9.00 மணிக்கு மறியற் போராட்டம் ஆரம்பமானது இந்தப் போராட்டத்தில் ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட ஆசிரியர்களும், அதிபர்களும் கலந்து கொண்டனர்.

மறியல் போராட்டத்தினால் அலுவலகத்துக்கு உள்ளே எவரும் செல்ல முடியாத நிலையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் வெளியே நின்றனர்.

பகல் 12.00 மணியளவில் தமது போராட்டத்துக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளையிடம் கையளித்தபின் அனைவரும் கலைந்து சென்றனர்.

அதன்பின்னர் பணிப்பாளருடன் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் யாழ். செயலகம் சென்று ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்டகடிதத்தை அரச அதிபரிடம் சமர்ப்பித்தனர்.

வலிகாமம், தீவகம், தென்மராட்சி, வடமராட்சிப்பகுதிகளிலும் ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டம் நடத்தி வலயப் பணிப்பாளர்களிடம் மகஜர்களைக் கையளித்தனர்.

அங்கும் பாடசாலைகள் யாவும் செயலிழந்திருந்தன. (இ -3-5-7-13-15-27-31-51-86-117-118-139-152-173)

## தற்கொலை...

(முதலாம் பக்கத் தொடர்)
துடன் குண்டு வெடித்தது என்றும்—தெரிவிக்கப்பட்டது

தமது வீட்டில் இருந்து புறப்பட்டு 200 மீற்றர் தூரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீலன் திருச்செல்வம் உடல் சிதறி அந்த இடத்திலேயே உயிர் துறந்தார்.

அவரது வாகனத்துக்குப் பின்னால் வந்த வாகனத்தில் இருந்த சப் இன்ஸ்பெக்டர் உட்பட 7 பொலீஸார் படுகாயமடைந்தனர்.

நீலனின் சாரதியும் காயமடைந்தார்.

தற்கொலைக் குண்டுதாரியான ஆணும் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அந்தப்பகுதியில் நீலனின்கார்உட்பட 4 வாகனங்களுக்குசேதம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப்பகுதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டது.

தற்கொலைக் குண்டுதாரி அந்தப் பகுதிக்கு மற்றும் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் வந்தார் என்றும்—

மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்தவர் அவரை இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்று விட்டார் என்றும்—

தப்பிச் சென்றவரைத் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி நீலன் திருச்செல்வம் அரசமைப்புத் தொடர்பான சட்டத்துறையில் ஒரு நிபுணராவார்.

டட்லி சேனநாயக்கா அரசில் உள்ளூராட்சிஅமைச்சராக இருந்த எம். திருச்செல்வத்தின் புதல்வரான அவர் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை மாணவரான அவர் 1969 ஆம் ஆண்டு சட்டத்துறையில் பிரவேசித்தார். அவர் 'ஹவார்ட்' பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெற்றார். (இ-3-7-6)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-07-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org